


பதிப்பு 2021

# புதிய வழமையில் டிஜிட்டலினை வழங்குதல்

## டிஜிட்டல் நிதியியல் அறிவு நிகழ்ச்சித்திட்டம் - பயிற்சியளிப்பவர் கைநூல்

### இணையவழி மற்றும் வகுப்பறைப் பயிற்சி

## மற்றும் சில பயிற்சியாளர் பயிற்சி வெளியீட்டின் தொடர்

### සිංහල

- ඩිජිටල් මූල්‍ය සාක්ෂරතා වැඩසටහන (2021)
- මූල්‍ය සාක්ෂරතා වැඩසටහන (2021)

### தமிழ்

- டிஜிட்டல் நிதியியல் அறிவு (2021)
- நிதியியல் அறிவு (2021)

### English

- Digital Financial Literacy Program (2021)
- Financial Literacy Program (2021)

## இலங்கை மத்திய வங்கியின் (CBSL) மற்றும் சர்வதேச நிதி நிறுவனம் (IFC) மூலமான ஒரு கூட்டு வெளியீடு

இலங்கை தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயம், அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் பங்கேற்புடன் சர்வதேச நிதியியல் கூட்டுத்தாபனத்திலிருந்து கிடைத்த தொழில்நுட்பவியல் மற்றும் நிதியியல் உதவியுடன் இலங்கை மத்திய வங்கியினால் முன்னெடுக்கப்பட்ட. உபாயமானது, டிஜிட்டல் நிதி மற்றும் கொடுப்பனவுகளைக் கவனத்திற்குரிய முக்கிய துறைகளிலொன்றாக அடையாளம் கண்டிருக்கிறது.

டிஜிட்டல் நிதி மற்றும் கொடுப்பனவின் குறைந்தளவு பயன்பாட்டினைக் கருத்தில் கொண்டு, டிஜிட்டல் நிதி தொடர்பான விழிப்புணர்வினை மேம்படுத்துவதற்காக பொதுமக்களிடையே இதன் பயன்பாட்டினை எடுத்துச் செல்வதற்காக இம்மாதிரியானது உருவாக்கப்பட்டுள்ளது.

பதிப்புரிமை மற்றும் பொறுப்பு துறப்பு அறிவித்தல்
@ சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனம், முதல் அச்சு ஏப்பிறல் 2021
அனைத்து உரிமைகளும் பதிவுசெய்யப்பட்டுள்ளன.
2121
பென்சில்வேனியா அவென்யு, என்.டபிள்யு.
வோஷிங்டன். டி.சி. 20433
www.ifc.org

## உரிமைகளும் மற்றும் அனுமதிகளும்

இவ்வெளியீட்டிலுள்ள விடயங்கள் பதிப்புரிமையினைக் கொண்டனவாகும். சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனம் இவ்வெளியீட்டினைப் பயன்படுத்துவதனையும் விநியோகம் செய்வதனையும் ஊக்குவிக்கிறது. மூல விடயங்கள் எங்கிருந்து பெறப்பட்டன என்பதனைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும் என்பதற்கும் உள்ளடக்கங்கள் வர்த்தக நோக்கங்களுக்குப் பயன்படுத்தக்கூடாது என்பதற்கும் உட்பட்டு, முன்னொப்புதலின்றி இவ்வாவணத்திலிருந்து உள்ளடக்கங்களை எவ்வித கட்டுப்பாடுமின்றிப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதுடன் வேறு வடிவங்களிலும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

இவ்வறிக்கையில் உள்ளடங்கியுள்ள முடிவுகளும் நியாயப்படுத்தல்களும் சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனத்தினதோ அல்லது, அதன் பணிப்பாளர் சபையினதோ அல்லது உலக வங்கியினதோ அல்லது அதன் நிறைவேற்றுப் பணிப்பாளர்களினதோ அல்லது அவை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடுகளினதோ கருத்துக்களைப் பிரதிபலிக்க வேண்டுமென்ற அவசியமில்லை. சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனமும் உலக வங்கியும் இவ்வெளியீட்டிலுள்ள தரவுகளின் துல்லியத்தன்மைக்கு உத்தரவாதமளிக்கமாட்டா என்பதுடன் இவற்றினைப் பயன்படுத்துவதனால் ஏற்படும் ஏதேனும் விளைவுகளுக்கான பொறுப்புக்களையும் ஏற்றுக்கொள்ளமாட்டா.

அனைத்து விசாரணைகளுக்கும் அல்லது துணை உரிமைகள் உட்பட, உரிமைகள் மற்றும் உரிமங்களுக்கும் சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனம், இல.42, மாடி 15, "DHPL" கட்டடம், நவம் மாவத்தை, கொழும்பு 02, இலங்கை என்ற முகவரியில் தொடர்பு கொள்ளுதல் வேண்டும். சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனம் அதன் உறுப்பு நாடுகளிடையேயான உடன்படிக்கையின் உறுப்புரைக்கிணங்க நிறுவப்பட்டதொரு சர்வதேச நிறுவனமாக விளங்குவதுடன் உலக வங்கிக் குழுமத்தின் உறுப்பினராகவும் இருக்கிறது. இலச்சினை மற்றும் வர்த்தக அடையாளங்கள் என்பன பன்னாட்டு நிதிக் கூட்டுத்தாபனத்தின் சொத்துக்களாக விளங்குவதுடன், பன்னாட்டு நிதிக் கூட்டுத்தாபனத்தின் எழுத்து மூலமான சம்மதமின்றி எந்தவொரு நோக்கத்திற்கும் அத்தகைய ஏதேனும் பொருட்களைப் பயன்படுத்தவும் கூடாது. மேலும், “சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனம்” மற்றும் “IFC” என்பன சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனத்தின் பதிவுசெய்யப்பட்ட வர்த்தக அடையாளங்களாக இருப்பதுடன் சர்வதேச சட்டங்களின் கீழ் பாதுகாக்கப்பட்டும் வருகின்றன.

| பொருளடக்கம் | பக்க இல. |
|---|---|
| பின்னணி | 3 - 9 |
| இணையவழிப் பயிற்சி | 10 - 28 |
| வகுப்பறைப் பயிற்சி | 29 - 52 |

# பின்னணி

இலங்கை முழுவதிலும் நிதியியல் வசதிக்குட்படுத்தலை மேம்படுத்துவதற்கு கூடியளவு காத்திரமானதும் வினைத்திறன்மிக்கதுமான செய்முறைகளை ஊக்குவிக்கின்ற நோக்குடன் 2021இல் இலங்கை அதன் முதலாவது தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தலை ஆரம்பித்தது. தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தின் உருவாக்கம் வேலை நிகழ்ச்சித்திட்டத்திலுள்ள ச.நி.கூ - DFAT மகளிர், "Women in Work Program" இலங்கை இன் கீழ் சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனத்தின் தொழில்நுட்ப உதவியுடன், இலங்கை மத்திய வங்கியினால் முன்னெடுக்கப்பட்டதொரு பல்- அக்கறையுடையோரின் முயற்சியொன்றாகும்.

தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயம் நிதியியல் வசதிக்குட்படுத்தலுக்கான தேசிய அளவீட்டினை அடிப்படையாகக் கொண்டதாகும். அளவீடானது, வேறுபட்ட நிதியியல் வசதிக்குட்படுத்தல் வாய்ப்புக்கள் மீதும்பெண்கள் மற்றும் ஆண்களுக்கான தடைகளையும் புரிந்துகொள்வதன் மீதும் விசேட கவனத்தினைச் செலுத்தியது. இது, தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தலை உருவாக்குவதில் விலைமதிப்பற்றதாகும். தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் அளவீட்டின் பெறுபேறுகள் இலங்கை முழுவதிலும் நிதியியல் உள்ளடக்கத்தின் நான்கு மையக் கூறுகளான:

- அணுகுதல் மற்றும் பயன்படுத்தல்
- டிஜிட்டல் நிதி
- நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு மற்றும்
- நிதியியல் அறிவு

என்பனவற்றிலுள்ள பால் வேறுபாடுகளை அடையாளம் காண உதவியிருக்கிறது. இத்தூண்களிடையேயுள்ள பால் வேறுபாடுகளைச் சிறந்த முறையில் விளங்கிக் கொள்வதற்கு தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் அளவீடு பால் அடிப்படையிலான பிரித்தல் தரவுகளைத் தருகிறது. கணக்குகளைச் சொந்தமாகக் கொண்டிருக்கும் மட்டம் உயர்வாகக் காணப்படுகின்ற வேளையில் அதனைப் பயன்படுத்துவது குறைவாகக் காணப்படுவதுடன் நிதியியல் முறைசாரா துறைகளைப் பெண்கள் நாடுவது ஆண்களை விடக் கூடுதலாகக் காணப்படுகின்றது. நிதியியல் அறிவினை வளர்ப்பது வாடிக்கையாளர் பாதுகாப்பினை வலுப்படுத்துவது இரண்டும் முறையியல் சார்ந்த நிதியியல் சேவைகளில் பொதுமக்கள் ஆழமாக நம்பிக்கை வைப்பதற்கும் அவற்றின் பயன்பாட்டை அதிகரிப்பதற்கும் அவசியமாகும். தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் அளவீட்டின் பெறுபேறுகள் இம்மையக் கூறுகள் இரண்டினையும் பலப்படுத்துவதற்கான தேவையினை வலியுறுத்துகின்றன.

இதற்குப் பதிலிறுத்தும் விதத்தில், இலங்கையில் நிதியியல் வசதிக்குட்படுத்தலை மேம்படுத்துவதற்கான இலங்கை மத்திய வங்கியின் முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதற்காக சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனத்தினால் நிதியியல் அறிவு நிகழ்ச்சித்திட்டமொன்று வடிவமைக்கப்பட்டது.

கொவிட்-19 சூழ்நிலைகளைக் கருத்திற்கொண்டு, நிகழ்ச்சித்திட்டமானது, புத்தாக்க டிஜிட்டல் சாதனங்களுடன் மெய்நிகர் வழங்கல் பொறிமுறைகளுக்குப் பொருத்தமான விதத்தில் மீளவடிவமைக்கப்பட்டிருக்கிறது.

பயிற்சியளிப்பவர் வழிகாட்டலானது பாடநெறிகளின் விபரணங்களை உள்ளடக்கியிருப்பதுடன், நிகழ்ச்சித்திட்டத்தினூடாக வழங்கப்படும் ஒவ்வொரு பாடநெறிகளுக்கான விபரணங்களையும் மேலோட்டமாகக் குறிப்பிடுகிறது. இது, நிதியியல் அறிவு மற்றும் டிஜிட்டல் அறிவு என்பனவற்றிற்கான மாதிரிகளை உள்ளடக்கியிருப்பதுடன் வாடிக்கையாளர் பாதுகாப்பினை நேருக்குநேர் மற்றும் மெய்நிகர் வழங்கல் படிவங்களுடன் கூட்டிணைக்கிறது.

மாதிரிகளை, வேறுபட்ட சபையோரின் தேவைகளைப் பூர்த்திசெய்யும் விதத்தில், மொழியில் நெகிழ்ச்சித்தன்மை, தேவைகளை அட்டவணைப்படுத்தல் மற்றும் கல்வி மட்டங்களுடன் மாற்றியமைத்துக் கொள்ளமுடியும். பயிற்சியளிப்பவர் வழிகாட்டியும் பால் கரிசனைகளை வழங்குவது தொடர்பான வழிகாட்டலை உள்ளடக்குவதற்காக நிதியியல் வசதிக்குட்படுத்தல் துறையில் மேற்கொள்ளப்பட்ட இலங்கையின் முதல் முயற்சிகளிலொன்றாகும்.

### நிகழ்ச்சித்திட்டத்தின் குறிக்கோள்கள்

- வாடிக்கையாளர்களுக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள புதிய நிதியியல் சேவைகள் மீதான அறிவினை இற்றைப்படுத்தல்.
- வயது வந்த பயிலுநர்களுக்கு மெய்நிகர் மற்றும் நேருக்குநேர் பங்கேற்கும் பயிற்சிகளை வழங்குவதில் காணப்படும் வேறுபாடுகளை விளக்குதல்.
- பால் கரிசனைகளைக் கொண்ட முறையொன்றில் பயிற்சிகளை வழங்குவதன் முக்கியத்துவத்தினைச் சரியாக மதிப்பிடல்.

### பயிற்சியாளர்களுக்கான முற்தேவைப்பாடுகள்

- வியாபாரம் மற்றும் நிதியியல் பின்புலத்தினைக் கொண்ட பயிற்சியாளர்கள் மாதிரிகளை வழங்குவதற்குப் பொறுப்புடையவர்களாக இருத்தல் வேண்டும்.
- மேலும், பயிற்சியளிப்பவர்கள் மெய்நிகர் பயிற்சிகளை அளிப்பதற்கு இணையவழி தளம்களைக் கையாள்வதில் தன்னம்பிக்கை கொண்டவர்களாக இருத்தல் வேண்டும்.

# பின்னணி...



## பயிற்சியளிப்பவர்களின் பயிற்சியளித்தல் நிகழ்ச்சித்திட்ட விபரங்கள்

- இப்பயிற்சியளிப்பவர்களின் பயிற்சியளித்தல் என்பது நிதியியல் விடயங்கள் மீது வயது வந்தோர் பயில்தல் நிகழ்ச்சித்திட்டங்களை வழங்குவதில் ஈடுபட்டிருக்கின்றவர்களுக்கான ஒன்றிலொன்று சார்ந்த பரஸ்பர பயில்தல் அனுபவமாகும்.
- வகுப்பறையொன்றிலும் இணையவழியிலும் இலக்கிடப்பட்ட பயிற்சியை எவ்வாறு வழங்குவது என்பது பற்றி பயிற்சியளிப்பவர் பயின்று கொள்ளுதல் வேண்டும்.
- குறிப்பாக, பயிற்சியளிப்பவர்கள் மெய்நிகர் பயில்தல் சூழலை முகாமைப்படுத்தக்கூடிய இயலாற்றலைக் கொண்டவர்களாகவும் குழும கலந்துரையாடலுக்கு வழிகாட்டக்கூடியவர்களாகவும் காத்திரமான பின்னூட்டல்களை வழங்கக்கூடியவர்களாகவும் இருத்தல் வேண்டும்.
- பயிற்சியளிப்பவர்கள் பால் இன கரிசனைகளுடன் கூடிய பயிற்சி வழங்கலை அறிந்திருக்கின்றனர் என்பதனை உறுதிப்படுத்துவதில் விசேட கவனம் செலுத்தப்படல் வேண்டும்.
- நிகழ்ச்சித்திட்டத்தினை வழங்கும் பொழுது, பயிற்சியளிப்பவர்கள், பங்கேற்பு நடவடிக்கைகள், முன்மாதிரித் தொழிற்பாடு மற்றும் ஒன்றிலொன்று சார்ந்த பரஸ்பர விளையாட்டுக்கள் என்பனவற்றிலும் ஈடுபடுபவராக இருத்தல் வேண்டும்.
- பயிற்சியளிப்பவர் பயிற்சியளித்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் போது, பயிற்சியை வழங்குவதில் நெகிழ்ச்சித்தன்மையுடன் இருக்க வேண்டியதன் அவசியம் பற்றி பயிற்சியளிப்பவர்களுக்கு அறிவிக்கப்படும். எடுத்துக்காட்டாக, கற்பித்தல் என்பது ஒரு நாள் முழுவதும் அல்லது பல நாட்கள் அல்லது வாரங்களைக் கொண்ட பரந்து விரிந்த தனியான தொடர்ச்சியான செயலமர்வுகளைக் கொண்டிருக்கும். பயிற்சியளிப்பவர் அமர்வின் நீளத்தினைத் தீர்மானிக்கையில் சூழ்நிலையினையும் பயில்கின்றவர்களின் கிரகிக்கும் இயலாற்றலையும் அளவிட்டுக் கொள்ளுதல் வேண்டும்.
- பயிற்சியளிப்பவர்கள் அர்த்தமுள்ள விதத்தில் பயிற்சியை வழங்க பயின்று கொள்ளுதல் வேண்டும். இது பயிலுநர்களின் நடத்தை சார்ந்த மாற்றங்களுக்கு வழிவகுக்கும்.

## பயிற்சியளிப்பதில் பால் இன வசதிக்குட்படுத்தல் அணுகுமுறை

"பால் இன வசதிக்குட்படுத்தல்" என்ற சொற்பதம் ஆண்கள், பெண்கள் ஆகிய இருபாலாருக்கும் கிடைக்கக்கூடிய நிகழ்ச்சித்திட்டங்களைக் குறிக்கிறது. எனினும், பெண்கள் முழுமையாகப் பங்கேற்பதற்குக் காணப்படக்கூடிய ஏதேனும் தடைகளை வெற்றிகொள்ளும் விதத்தில் வடிவமைக்கப்பட்டிருக்கிறது. பால் வசதிக்குட்படுத்தல் தேர்ச்சியைக் கட்டியெழுப்பும் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவது, பால் இன சமநிலைத்தன்மையினை ஊக்குவிப்பதற்கும் பால் இன பாரபட்சங்களை ஒழிப்பதற்குமான வலுவானதொரு வழியாகக் காணப்படுகிறது.[1]

- இப்பிரிவானது, பால் இன வசதிக்குட்படுத்தல் முறையில் பயிற்சியளிப்பதற்கு பயிற்சியளிப்பவர்களுக்கு வழிகாட்டுவதற்கு ஆதரவளிப்பதனை நோக்கமாகக் கொண்டுள்ளது. இது பயிற்சியானது பால் இன அணுகுமுறையைக் கொண்டிருக்கின்றதென்றோ அல்லது பால் இன தொடர்பான பிரச்சனைகளை அல்லது சமத்துவ தன்மைகளைக் கட்டுப்படுத்துகின்றதென்றோ அர்த்தம் தராது. மாறாக, இது சமத்துவமான பங்கேற்பினை ஊக்குவிக்கின்றதொரு முறையில் பயிற்சியளிக்கப்படுகிறது என்பதேயாகும்.
- பால் இன வசதிக்குட்படுத்தல் பயிற்சி, பால் உறவுமுறைகளையும் சில பெண்கள் மற்றும் ஆண்களினால் எதிர்நோக்கப்பட்ட பயிற்சியில் தீவிரமாக பங்கேற்பதற்குக் காணப்படும் தடைகளையும் நியாயமான முறையில் மதிப்பிடப்படுவதனைத் தேவைப்படுத்துகிறது. தடைகள் சமயம், சாதி, வயது, இனம், உடல் ஊனம் மற்றும் பாலியல் சார்ந்த தன்மைகளுடன் தொடர்பானவையாக இருக்காலம்.
- பயிற்சியளிப்பவர்களுக்கான பயிற்சியளித்தல் நிகழ்ச்சித்திட்டம் இத்தடைகளை வெற்றிகொள்வதற்கும் அனைத்துப் பங்கேற்பவர்களின் பயில்தல்களை ஊக்குவிக்கக்கூடியதுமான பயிற்சிகளை மேற்கொள்வதற்கும் வசதியளிக்கக்கூடிய முறைகளைப் பின்பற்றுவதற்கும் ஏற்ற விதத்தில் பயிற்சியளிப்பவர்களின் மனங்களைத் திறந்துவிடும்.
- பால் இன வசதிக்குட்படுத்தலை வலியுறுத்துகின்ற தேவைப்பாடு தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் அளவீட்டு பெறுபேறுகளில் காணப்படும் நிதியியல் வசதிக்குட்படுத்தலில் அவதானிக்கப்பட்ட பால் இன சமத்துவமின்மைகளின் மூலம் எடுத்துக்காட்டப்படுகிறது. எடுத்துக்காட்டாக, நிதியியல் சேவைகள் தொடர்பிலும் உதவிகளை நாடுவதற்கான பொறிமுறைகளிலும் (நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு) ஆண்கள், பெண்கள் ஆகிய இருவரும் போதுமான அறிவினைக் கொண்டிருக்காத வேளையில், டிஜிட்டல் நிதியியல் சேவைகள் போன்ற துறைகளில் பால் இன இடைவெளி காணப்படுகிறது. இதற்கமைய, நிதியியல் நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் டிஜிட்டல் நிதியியல் அறிவு தொடர்பான அம்சங்கள் பயிற்சி வழங்கலில் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன.

## பால் இன கரிசனைகளுடன் பயிற்சியளித்தலை பயிற்சியளிப்பவர்கள் எவ்வாறு காத்திரமான முறையில் மேற்கொள்ளலாம்?

- பயில்தலுக்கு வசதியளிக்கின்றமையின் செயற்பரப்பு ஒரு சில பேருக்கு பயிற்சியளிப்பதிலிருந்து நூற்றுக்கணக்கிலிருந்து ஆயிரக்கணக்கான பங்கேற்பாளர்களுக்கு பயிற்சியளிப்பது வரை விரிவடைந்து வெப்தளத்திற்கு இட்டுச்செல்வது வரை காணப்படுகின்றது (சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனம், 2020).
- பயில்தலுக்கு வசதியளிப்பதற்கான முக்கிய குறிக்கோள்களாகப் பின்வருவன காணப்படுகின்றன:
  - பயில்தலுக்குத் தூண்டுதலளிக்கின்ற சூழ்நிலையொன்றினை உருவாக்குதல்.
  - அனைத்துப் பங்கேற்பாளர்களும் பயில்தல் அனுபவங்களைப் பெற்றுக் கொள்ளும் விதத்தில் ஊக்குவித்தல்.
  - பங்கேற்பாளர்கள் அவர்களின் பணியில் ஈடுபடுவதனையும் அவர்களது பயில்தலுக்கு பொறுப்புக்கூறக்கூடியவர்களாக இருப்பதனையும் கவனித்துக் கொள்ளல்.
  - ஒன்றிலொன்று சார்ந்த பரஸ்பர நடவடிக்கை மற்றும் நடைமுறைகளுக்கான பங்கேற்பாளர்களுக்குரிய வாய்ப்புக்களை உச்சப்படுத்தல்.
  - தனிப்பட்டவர்கள் மற்றும் குழுமங்களின் குறித்துரைக்கப்பட்ட தேவைகளுக்கேற்ப பயில்தல் அனுபவங்களை மாற்றியமைத்தல்.
  - நிர்ணயிக்கப்பட்ட பயில்தல் குறிக்கோள்களைப் பங்கேற்பாளர்கள் காத்திரமான முறையில் எய்துவதற்குஅவர்களுக்கு உதவுதல்.
- பங்கேற்பாளர்கள் தன்னம்பிக்கையினை உணர்வதனையும் நிதியியல் விடயங்களைக் கையாள்வது தொடர்பில் அவர்களது அனுபவம் பற்றி தயக்கமின்றி பேசுவதனையும் உறுதிப்படுத்துவதற்கு சிறந்த பயிற்சி வசதி முக்கியமானதாகும். இது, எதிர்காலத்தில் தைரியமான நிதியியல் தீர்மானங்களை மேற்கொள்வதனை இயலுமைப்படுத்துவதற்கு முக்கியமானது என்பதுடன் டிஜிட்டல் நிதி மற்றும்முறைப்பாடுகளைத் தீர்ப்பதற்கான பொறிமுறைகள் போன்ற புதிய துறைகளில் அறிவினை மேம்படுத்துவதற்கும் முக்கியமானவைகளாகும்.

# பின்னணி...

- பயிற்சியாளரொருவருக்கான முதலாவது நடவடிக்கை அவர்களின் சொந்த தப்பபிப்பிராயம் அல்லது பாரபட்சமான தன்மையை அறிந்து கொள்வதாகும். இத்தகைய நியாயமற்ற பாரபட்சமான தன்மைகள் பயிற்சியாளர் பயிற்சிகளை நடத்துகின்ற முறையிலும் பயன்படுத்துகின்ற மொழி, நகைச்சுவை உணர்வு மற்றும் எடுத்தாளும் உதாரணங்கள் என்பன மீதெல்லாம் செல்வாக்கைச் செலுத்தும். அவை, ஆசிரியர்களின் பாரம்பரியத்தில் முக்கியமான பரிசீலனைக்குரிய விடயங்களாகும். பெரும்பாலான பயிற்சியாளர்கள் ஆண்களாக இருக்குமிடத்து பெண்களின் பாரம்பரியங்கள் தம்மைத்தாமே உணர்ந்து கொள்ளும் தன்மையினை ஏற்படுத்தக்கூடுமென்பதனால் அது பயிற்சியின் போது அவர்களின் பங்கேற்பினை மட்டுப்படுத்துகிறது.

- போதுமான நேரம் இல்லாமையும் பரிசீலனையில் கொள்ளப்பட வேண்டிய காரணியாகக் காணப்படுகின்றது. பெண் பங்கேற்பாளர்களைப் பொறுத்தவரை, பயிற்சிக்கான அட்டவணைகள் அவர்களின் மற்றைய பொறுப்புக்களை ஆற்ற வேண்டிய நேரத்துடன் சேர்ந்துவரக்கூடாது. அவ்வாறு வரும் பொழுது அது பங்கேற்பின் தாக்கத்தினை ஊக்கமிழக்கச் செய்கிறது. பொதுவாக, பயிற்சிகளை அட்டவணையிடும் போது சமய அநுட்டானங்களையும் சமூக கொண்டாட்டங்களையும் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். இவற்றையெல்லாம் மனதில் கொண்டு, இப்பயிற்சி நிகழ்ச்சித்திட்டம், பயிற்சியாளர்கள் நெகிழ்ச்சித்தன்மை கொண்ட மாதிரிகளில் பயிற்சிகளை நடத்துவதற்கு அவர்களை அனுமதிக்கின்ற விதத்தில் தேவையானவிடத்து ஒரு சில நாட்களுக்கு விரியத்தக்க விதத்தில் நெகிழ்ச்சித்தன்மையுடன் உருவாக்கப்பட்டிருக்கிறது.

## உள்ளடக்க வசதிக்குட்படுத்தல் பயிற்சிச் சூழலொன்றினை உருவாக்குவதற்கான பயிற்சி வழிகாட்டல்

| பரிசீலனைகள் மற்றும் பணிகள் | வினாக்கள் | துப்புக்கள் மற்றும் அணுகுமுறைகள் |
|---|---|---|
| **சமூக மற்றும் கலாச்சார விதிகள்** | | |
| பொருத்தமான மொழியையும் உதாரணங்களையும் பயன்படுத்தல் | 1 பயிற்சி வசதியின் போது பயன்படுத்துகின்ற மொழி இலக்கிடப்பட்ட குழுமத்திற்குப் பொருத்தமானதா? | • வினாக்களுக்குப் பதிலிறுத்தும் போது அல்லது கருதுகோள்களை விளக்கும் போது பொருத்தமான உதாரணங்களை அல்லது அதற்குப் பதிலாக அதனையொத்த இன்னொன்றினைப் பயன்படுத்துல்.<br>• உதாரணங்களும் அவற்றையொத்த வேறு விடயங்களும் உள்ளூர் பால், அரசியல் மற்றும் சமய விதிகளுக்கு ஏற்புடைத்தானவையா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.<br>• இலக்கிட்ட சபையோரின் சராசரி கல்வி மட்டத்திற்குச் சமமானதொரு மட்டத்தில் பேசுதல் வேண்டும்.<br>• வசதிக்குட்படுத்துநர்களும் பயிற்சியளிப்பவர்களும் ஆண்களையும் பெண்களையும் தீர்மானமிக்க சமமான முறையில் நடத்துதல் வேண்டும். |
| பால் இன வசதிக்குட்படுத்தல் பயில்தலுக்கான சூழலினை உருவாக்கிக் கொள்ளுதல் | 2 பயில்தல் சூழலொன்றில் பங்கேற்பாளர்கள் மிக சௌகரியமான உணர்வுடன் நிகழ்ச்சித்திட்டத்தில் கலந்து கொள்ளச் செய்வதற்கு எவ்வாறான நடவடிக்கையினை மேற்கொள்வீர்? | • பெண்களை இலக்காகக் கொண்ட நிகழ்ச்சித்திட்டங்களை வழங்கும் போது பால் இன சமநிலையினைப் பேணிக் கொள்வதனைப் பரிசீலனையில் கொள்ளுதல் வேண்டும். |

| பரிசீலனைகள் மற்றும் பணிகள் | வினாக்கள் | துப்புக்கள் மற்றும் அணுகுமுறைகள் |
|---|---|---|
| | 3 பயிற்சி வசதியின் போது இடையூறுகளை ஏற்படுத்தும் நடத்தையுடையோரை (பங்கேற்பாளர்கள் அல்லது குடும்ப உறுப்பினர்கள்) எவ்வாறு சாந்தப்படுத்திக் கொள்வீர்கள்? | • பாடநெறிகளை நடத்துகின்ற விதத்தில் மதிக்கப்பட வேண்டிய பயிற்சி சூழல் இது என்பதனைத் தெரிவித்தல் வேண்டும்.[4] |
| | 4 துன்புறுத்தல் அல்லது பாலியல் தொந்தரவுகளற்ற மரியாதையான சூழலொன்றினை உருவாக்குவதற்கு எந்நடவடிக்கைகளை எடுப்பது அவசியம்? | • மரியாதையற்ற நடத்தையைக் கொண்டவர்களுக்கெதிராக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| | 5 துன்புறுத்தல் அல்லது பாலியல் தொந்தரவுகள் இடம்பெறுமாயின் எத்தகைய நடவடிக்கைகளை எடுப்பது அவசியம்? | • இடையூறு விளைக்கும் நடத்தைகளைத் தடுப்பதற்கு அல்லது அதற்குத் தீர்வு காண்பதற்கு எந்நடவடிக்கை எடுக்கலாம் என்பது பற்றி பங்கேற்பாளர்களிடம் யோசனைகளைக் கேட்கலாம். |
| **தன்னம்பிக்கை மற்றும் தலைமைத்துவம்** | | |
| பயிற்சியில் தேவையானதொரு விடயமாக சுயதன்னம்பிக்கையினையும் தலைமைத்துவ தேர்ச்சியையும் பேணி வளர்த்தல் | 1 பயிற்சியை வழங்கும் போது சுயதன்னம்பிக்கை, சுயபயன்பாடு மற்றும் தவறுகளைத் திருத்திக் கொள்ளல் போன்ற அம்சங்களை நீங்கள் எவ்வாறு பலப்படுத்திக் கொள்வீர்கள்? | • கலப்பு வகுப்புக்களில், சிறிய குழு நடவடிக்கைகளில் ஆண் மற்றும் பெண் பங்கேற்பாளர்கள் இரு சாராருக்கும் தலைமைத்து வகிபாகத்தினை வழங்குவதன் மூலம் அவர்கள் தலைமைத்துவக் குழுக்களில் அனுபவத்தினையும் தன்னம்பிக்கையினையும் பெற்றுக்கொள்வர்.<br>• கலப்பு வகுப்புக்களில் மாறுதலே இல்லாத ஒரே மாதிரியான தன்மையினை உடைக்கின்ற விதத்தில் கதை வசனங்களை எழுதுகின்ற அல்லது "பாரம்பரியமான பெண் பாத்திரங்களை" ஆண்களுக்கு வழங்குதல். |
| | 2 பயில்தலை நீங்கள் வசதிப்படுத்தும் ஒருவிதமாக, தலைமைைத்துவம், வலியுறுத்தும் தன்மை, சுயமாகப் பரிந்து பேசுதல் மற்றும் எதிர்த்து நிற்கக்கூடியதன்மை ஆகிய அம்வங்களை நீங்கள் எவ்வாறு பலப்படுத்திக் கொள்வீர்கள்? | • தெளிவுபடுத்திக் கொள்வதற்கான கேள்வி நேரத்தின் போதும் நடவடிக்கைகள் பற்றி அல்லது விடயதானங்கள் பற்றி கலந்துரையாடும் போதும் சுயதன்னம்பிக்கை மற்றும் சுயவல்லமை என்பனவற்றின் "பொருத்தமானதன்மை" பற்றிய திறந்த கலந்துரையாடலொன்றினை ஊக்குவித்தல்.<br>• பெண்கள், ஆண்கள் இருபாலாரையும் குழும கலந்துரையாடல்களில் பங்கேற்கச் செய்வதற்கு அல்லது அவர்களின் குழுக்களுக்கு தலைமை தாங்கச் செய்வதற்கு ஊக்குவிப்பதற்கு மேலதிக முயற்சிகளை மேற்கொள்ளுதல்.<br>• வகுப்பின் போது பங்கேற்பாளர்களை விளக்கவுரைகளை ஆற்றும்படி கேட்பதன் மூலம் சுயவல்லமையினை வலுப்படுத்தல் மற்றும் ஒருவருக்கொருவர் உதவும் பயில்தல் நடவடிக்கைகளில் அவர்களை ஊக்குவித்தல்.<br>• பங்கேற்பாளர்கள் பாதுகாப்பாக தவறுகளைச் செய்கின்ற மற்றும் அவற்றிலிருந்து பாடம் படிக்கின்ற நடவடிக்கைகளில் அவர்களை ஈடுபடுத்துவதன் மூலம் தவறுகளைத் தவிர்க்கும் தேர்ச்சிகளில் அவர்களை ஈடுபடுத்தல். |


# பின்னணி...

| பரிசீலனைகள் மற்றும் பணிகள் | வினாக்கள் | துப்புக்கள் மற்றும் அணுகுமுறைகள் |
|---|---|---|
| **வலையமைப்பு** | | |
| ஒருவருக்கொருவர் உதவும் பயில்தல்களை ஊக்குவித்தல் | 1 ஒருவருக்கொருவர் உதவுகின்ற பயில்தல்களை ஊக்குவிப்பதற்கு நீங்கள் எத்தகைய நடவடிக்கைகளுக்கு வசதியளிக்கலாம்? | • இருவர் அல்லது மூவராக வேலை செய்ய வேண்டிய பயிற்சியளித்தல் ஒப்படைகளை உருவாக்குவதன் மூலம் பங்கேற்பாளர்கள் ஒத்துழைப்பதற்கு ஊக்குவித்தல் மற்றும் பரஸ்பர ஆதரவினையும் பரஸ்பர தொழில்நுட்ப ஆதரவினையும் வழங்குதல்.[5இ6] |

## மெய்நிகர் பயிற்சிக்கான முக்கியமான பரிசீலனைகள்

- மெய்நிகர் பயிற்சிகளை நடத்தும் போது, பங்கேற்பாளர்களின், குறிப்பாக, தொழில்நுட்பங்களை அறிந்திராத வயது வந்த பங்கேற்பாளர்களின் வேறுபட்ட குடும்பப் பின்னணி மற்றும் தொழில்நுட்பவியலை அணுகும் தன்மை என்பனவற்றைப் பரிசீலனையில் கொள்வது முக்கியமானதாகும்.

- பங்கேற்பாளர்களைப் பயிற்சிக்கு அனுமதிக்கும் போது பயிற்சியளிப்பவர் பொறுமை மிகுந்தவராகவும் அறிவுறுத்தல்களை எளிமைப்படுத்துவதற்குத் தயாராகவும் பங்கேற்பாளர்களுக்கு வழிகாட்டுவதற்கு உதவியளிப்பவராகவும் இருத்தல் வேண்டும். இதன் மூலம் பங்கேற்பாளர்கள் மெய்நிகர் பயிற்சியில் பெரும்பாலான விடயங்களைக் கிரகித்துக் கொள்வர். பங்கேற்பாளர்களுக்கு வழிகாட்டுவது தொடர்பில் ஷைகைகளைக் காட்டுதல் பேசும் தொழிற்பாடுகள், கலந்துரையாடல்களிலிருந்து வெளியேறுதல், திரையினைப் பகிர்ந்து கொள்ளல் மற்றும் அதிலிருந்து வெளியேறுதல் என்பனவற்றைப் பயன்படுத்துவதில் பங்கேற்பாளர்களுக்கு வழிகாட்டுதல் என்பனவற்றை இவை உள்ளடங்குகின்றன.




- மெய்நிகர் பயிற்சிகளில் பங்கேற்பாளர்கள் புவியியல் ரீதியாக பரந்த அமைவிடங்களிலிருந்து இணைக்கப்படுவதனால் அனுபவங்களையும் உதாரணங்களையும் பகிர்ந்து கொள்ளும் போது பயிற்சியளிப்பவர்கள் இவற்றைப் பரிசீலனையில் கொள்ளுதல் வேண்டும்.

- பல்வேறு இடையூறுகளைக் கொண்ட பின்னணியில் வீடுகளில் வதியும் பங்கேற்பாளர்களின் கவனத்தினை மெய்நிகர் பயிற்சிகள் சிதறடித்துவிடும் என்பதனை பயிற்சியளிப்பவர்கள் மனதில் கொள்வது அவசியமாகும்.

## பொதுவான பரிசீலனைகள் மற்றும் தேவைப்பாடுகள்

பயிற்சியளிப்பவர் அல்லது பயிற்சி வழங்குகின்ற அமைப்பாளர் கர்ப்பிணிப் பெண்கள், உடல் ரீதியாக சவால்களைக் கொண்டவர்கள், வேறுபட்ட முதல் மொழியைப் பேசுபவர்கள், பிள்ளைகளைப் போதியளவிற்குக் கவனித்துக் கொள்ளமுடியாத தனிப் பெற்றோர் உட்பட விசேட தேவையுடைய பங்கேற்பாளர்களுக்குத் தேவைப்படுவனவற்றிற்கு வசதியளிப்பது பற்றி அறிந்திருத்தல் வேண்டும்.

பயிற்சியளிப்பவர்கள் பின்பற்ற வேண்டிய ஒழுங்குவிதிகள் பற்றி அறிந்து கொள்வதற்கு மனப்பூர்வமான முயற்சிகளை எடுத்தல் வேண்டும் என்பதுடன் உள்வரும் மின்னஞ்சல், தொலைபேசி அழைப்புக்கள் போன்ற கவனத்தினைத் திசைதிருப்பும் விடயங்களை மட்டுப்படுத்திக் கொள்ளுதலும் வேண்டும்.

பயிற்சியாளர்கள் பின்வருவனவற்றை வைத்திருத்தல் அவசியம்:

- ஒன்றிலொன்று செயற்பாடு சார்ந்த விளக்கவுரை படிவத்தில் பயிற்சியளிக்கின்ற மாதிரி
- பயிற்சியளிப்பவர் கைநூல்
- இணையத்தள இணைப்பு
- கணனி மற்றும் காணொளி மற்றும் செவிப்புல கோவைகளைக் கேட்பதற்கான ஒலிபெருக்கி போன்ற தேவையான வன்பொருட்கள்

# இணையவழிப் பயிற்சி

## வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள்:

**இணையவழிப் பயிற்சியொன்றினை எவ்வாறு நடத்துவது என்பதனை வலியுறுத்துகின்ற இப்பயிற்சியளிப்பவர் கைநூல் பயிற்சியளிப்பவருக்கான படிப்படியான வழிகாட்டலை உறுதிப்படுத்துவதுவதற்காக உருவாக்கப்பட்டதொன்றாகும்.**

- முதலாவது நிரல் விபரமாக விளக்குவதுடன் பயிற்சியளிக்கின்ற மாதிரியின் ஒவ்வொரு பிரிவினதும் வழங்கலுக்கான வழிகாட்டலையும் வழங்குகிறது.
- "தொடர்பான மூலப்பொருட்கள் மற்றும் அறிவுறுத்தல்கள்" என்ற இரண்டாவது நிரல் PPT பயிற்சிக் கருவியிலுள்ள தொடர்பான பிரிவினைக் குறித்துரைக்கிறது. இத்தொடர்பு மூலப்பொருட்கள் இச்சிற்றேட்டிற்கான இணைப்பொன்றாக வழங்கப்படுகின்றது (இணைப்பு 1 "பயிற்சிக் கருவிகள்" மற்றும் இணைப்பு 2 "பயிற்சியளிப்பவர் குறிப்பு")
- இப்பயிற்சியளிப்பவர் இவ்வழிகாட்டலுக்குப் புறம்பாக, பயிற்சியளிப்பவர் JustPay, LankaQR போன்ற புதிய கொடுப்பனவு முறைகளுடன் தொடர்பான பண்புகள், கொடுக்கல்வாங்கல் வரையறைகள் மற்றும் ஒழுங்குவிதிகள் பற்றி தானாகவே பரீட்சயப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். கைநூல், அது, பிரசுரிக்கப்படுகின்ற திகதியிலுள்ளவாறான தகவல்களை வழங்குகின்ற அதேவேளையில் சந்தைத் தேவைப்பாடுகளுக்கேற்ப அதற்கு இற்றைப்படுத்தல்கள் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றன (லங்காகிளியர் - https://www.lankaclear.com/, இலங்கை மத்திய வங்கி - https://www.cbsl.gov.lk/).




# அமர்வு ஒன்று - டிஜிட்டல் நிதியியல் கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் இணையவழிக் கொடுப்பனவுகளுக்கான அறிமுகம்

**அமர்வு நேர அட்டவணை:** **காலம் - 70 நிமிடங்கள்**

| | அமர்வின் தலைப்பு | காலம் (நிமிடம்) | பக்க இல. |
|---|---|---|---|
| A | வரவேற்பு மற்றும் அறிமுகம் | 5 | 13 |
| B | டிஜிட்டல் நிதியியல் கொடுக்கல்வாங்கல்களுக்கான அறிமுகம் | 15 | 15 |
| C | இணையவழிக் கொடுப்பனவுகள் | 5 | 16 |
| D | இணையத்தள வங்கித்தொழில் | 10 | 16 |
| E | செல்லிடத் தொலைபேசி வங்கித்தொழில் செயலிகள் | 10 | 17 |
| F | செல்லிடத் தொலைபேசி வங்கித்தொழில் கொடுப்பனவுச் செயலிகள் | 15 | 18 |
| G | எவ்வாறு டிஜிட்டல் நிதியியல் கொடுக்கல்வாங்கல்களை பாதுகாப்பான முறையில் மேற்கொள்வது | 10 | 20 |

## A. வரவேற்பு மற்றும் அறிமுகம் (5 நிமிடங்கள்)

| பயிற்சி வழங்கலுக்கான படிப்படியான வழிகாட்டல் | தொடர்பான மூலப்பொருட்கள் மற்றும் அறிவுறுத்தல்கள் |
|---|---|
| ➤ பயிற்சியளிப்பவர், பயிற்சியளிக்கின்ற நேரத்திற்கு குறைந்தபட்சம் 10 நிமிடங்கள் முன்னதாக, இணையவழி தளத்தினூடாக கூட்டத்தில் இணைந்து கொள்ளுதல் வேண்டும். பயிற்சியளிப்பவர் இணையவழி கூட்டத்தினை அணுகுவதற்கு பங்கேற்பாளர்களை அனுமதித்தல் வேண்டும். | **தொடர்பு PPT: DFS 1-01** |
| ➤ Zoom கூட்டத்தில் குறைந்தபட்சத் தேவையான அளவு எண்ணிக்கையான பங்கேற்பாளர்கள் இணைந்து கொண்டதும் அமர்வு ஆரம்பமாகும். | |
| ➤ பயிற்சியளிப்பவர், பயிற்சி பெறுபவர்களை வரவேற்கும் பொழுது கமெரா சரியான முறையில் இயங்குவதனை உறுதிப்படுத்திக் கொண்டு பயிற்சியளிப்பவர் தம்மைத் தாமே அறிமுகப்படுத்திக் கொள்ளல் வேண்டும். பயிற்சியளிப்பவர் Zoom இலுள்ள 'பேச்சாளர் கோணத்தினை' தெரிவுசெய்து கொள்ளமுடியும். | |
| ➤ இணையவழிப் பயிற்சி, வழமையான வகுப்பறையில் பயிலும் சூழலுடன் ஒப்பிடுகையில் வேறுபட்ட அனுபவத்தினைக் கொண்டதாகும் என்பதனைக் குறிப்பிடல் வேண்டும். | |
| ➤ திரையில் பெயர் தெரிவது ஒருவர் மற்றொருவரைத் தெரிந்து கொள்வதனை இலகுபடுத்தும் என்பதனால் பங்கேற்கும் அனைவரும் பெயர் திரையில் காணப்படுவதனை உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும் எனக் கேட்டுக் கொள்ளவும். | |
| ➤ இணையவழி அமர்வு என்பதன் கருத்து பங்கேற்பாளர்களுக்கு வழமையான முறையினை விட முக்கியமானதொரு விடயமாக இருக்கும் என்பதனை இணையவழி அமர்வில் ஆராய்தல் வேண்டும். இவ்வமர்வில் பங்கேற்பாளர்கள் தீவிரமாகப் பங்கேற்றல் வேண்டும். Zoom மினது முக்கியமான பண்புகளைச் சுருக்கமாக விளக்குக. | பயிற்சியாளரை பங்கேற்பாளர்கள் பார்க்கக் கூடியதாக இருத்தல் வேண்டும் |
| a. நிகழ்ச்சித்திட்ட ஒருங்கிணைப்பாளர் Zoom தளம் தொடர்பான ஆரம்ப அறிமுகத்தினை பயிற்சியாளர்களுக்கு ஏற்கனவே இது எவ்வாறு இயங்குகிறது என்பதனை வழங்கியுள்ளமையால் இது எவ்வாறு தொழிற்படுகின்றது என்பது பற்றி நினைவூட்டுவது ஒன்றிலொன்று தங்கியிருக்கும் பயிற்சி அமர்வினைப் பேண உதவும். | |
| b. பங்கேற்பாளர்கள் அவர்களது உலாவியைத் திரைக்கு கொண்டுவருமாறு கேட்கவும். | |
| c. திரையின் அடிப்பாகத்தில் நாடா போன்ற ஒன்று காணப்படும். இது பல தேர்வுகளை உள்ளடக்கியிருக்கும். இதனை மிகக் கவனமாகப் பார்க்குமாறு பங்கேற்பாளர்களைக் கேட்டுக் கொள்ளவும்.  | |

| பயிற்சி வழங்கலுக்கான படிப்படியான வழிகாட்டல் | தொடர்பான மூலப்பொருட்கள் மற்றும் அறிவுறுத்தல்கள் |
|---|---|
| d. நாடாவின் இடதுபக்க மூலையில், ஒலிவாங்கியின் உருவம் ஒன்று காணப்படுகின்றது. இதன் மூலம் உங்கள் குரலைத் தணிக்கலாம் அல்லது தணிக்காமல் விடலாம். இத்தேர்வினூடாக, குழுமத்துடன் உங்கள் யோசனைகளைப் பகிர்ந்து கொள்ள முடியும். ஆளொருவர் தனது யோசனையைத் தெரிவிக்க விரும்புமிடத்து அவர் பேசுவதற்கான அடையாளத்தினை அழுத்திப் பேசமுடியும். | |
| e. பங்கேற்பாளர்கள் இக்கருவியைப் பயன்படுத்துவதற்கு ஒலிவாங்கியின் உருவத்தின் மீது அழுத்திப் பேசவேண்டும். அவர்கள் பேசிமுடிந்ததும் ஒலிவாங்கியை செயலிழக்கச் செய்வதற்கும் அவற்றின் ஒலியினை அணைத்து விடுவதற்கும் இதேமுறையினைப் பயன்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். பங்கேற்பாளர்கள் கேள்விகளை கேட்காதவிடத்து அவர்களது கருத்துக்களை தெரிவிக்காதவிடத்து அவர்கள் சத்தத்தினைக் குறைத்து வைத்திருத்தல் வேண்டும் (அதாவது ஒலிவாங்கி இதனூடாக தொடர்புறுத்தப்பட்டிருக்கிறது). இதன் மூலம் வகுப்பறையினை நீங்கள் குழப்பாதிருக்கலாம். | |
| f. இரண்டு மனித தோற்றங்களை ஒத்த அடையாளங்களை அடியிலுள்ள அதே சட்டத்தில் காட்டப்படுகின்றன (இது பங்கேற்பாளர்களைக் குறிக்கிறது). பயிற்சியாளர்களை அதனை அழுத்துமாறு கேட்டுக் கொள்ளவும். | |
| g. அவர்கள் அதனை அழுத்தும் போது கையாடையாளமொன்று தோன்றும் அதனை அழுத்துமாறு அவர்களைக் கேட்டுக் கொள்ளவும். | |
| h. பங்கேற்பாளர்கள் பேச வேண்டுமென விரும்புகின்றவிடத்து அமர்வின் போது பேசுவதற்கு இவ்வடையாளத்தினை அழுத்தி அனுமதியினைப் பெற்றுக் கொள்ள வேண்டும். | |
| i. அவர்கள் பேசி முடிந்ததும் அவ்வுருவத்தின் மீது மீண்டும் அழுத்தல் வேண்டும். அப்போது திரையில் கையின் அடையாளம் மறைந்துவிடும். | |
| j. 'பேசுபவரின் தோற்றத்தினை' செயற்படுத்துவதற்கு மேலே இடதுபக்க மேல் மூலையிலுள்ள சதுர வடிவிலான வடிவத்தினை பயன்படுத்துமாறு கேட்டுக் கொள்ளவும். | |
| k. தளம் எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது என்பதனை அவர்கள் புரிந்து கொண்டிருப்பதனைக் காட்டும் விதத்தில் கையை உயர்த்தும் தேர்வினைப் பயன்படுத்துமாறு ஒவ்வொருவரையும் கேட்டுக்கொள்ளவும். | |
| l. அனைத்துப் பங்கேற்பாளர்களும் இப்பண்புகளை வெற்றிகரமாகப் பயன்படுத்தியதும் அவர்கள் தமது கைகளைக் கீழே இறக்குதல் வேண்டும். எல்லோருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு பயிற்சியை ஆரம்பித்தல் வேண்டும். | |

## B. டிஜிட்டல் நிதியியல் கொடுக்கல்வாங்கல்களுக்கான அறிமுகம் (15 நிமிடங்கள்)

| பயிற்சி வழங்கலுக்கான படிப்படியான வழிகாட்டல் | தொடர்பான மூலப்பொருட்கள் மற்றும் அறிவுறுத்தல்கள் |
|---|---|
| திரையில் சிலைட்டினைக் காட்சிப்படுத்தல் மற்றும் இன்றைய பயிற்சித் தலைப்பினை சுருக்கமாக அறிமுகம் செய்தல். | **தொடர்பு PPT: DFS 1-2** |
| தலைப்பின் முக்கியத்துவத்தினை வலியுறுத்துவதற்காக இலங்கை மத்திய வங்கியின் "காசு வதை" பிரச்சாரத்திலிருந்து குறுகிய காணொளியினை ஓடவிடவும். இது வாடிக்கையாளர் காசினைப் பயன்படுத்தல் கையாளல் என்பனவற்றுடன் தொடர்பான சுமைகள் பற்றிப் பேசுகிறது. | **தொடர்பு PPT: DFS 1-3** |
| காணொளி முடிவடையும் போது, ஒலிபெருக்கி முறைக்கு மாறி காணொளி பற்றி மிகச் சுருக்கமாக கலந்துரையாடுவதற்காக இரண்டு பங்கேற்பாளர்களை எழுமாறான முறையில் தெரிவுசெய்யவும். அவர்கள் பார்த்தவை பற்றி நீங்கள் கதைக்கலாம் என்பதுடன் இதைப் போன்றதொரு அனுபவம் அவர்களுக்கும் ஏற்பட்டதுண்டா எனக் கேட்கலாம். ஆழமான கலந்துரையாடலுக்குச் செல்ல வேண்டாம். | பயிற்சியாளர் திரையில் தோன்றுதல் வேண்டும் |
| காசைப் பயன்படுத்துவதனால் ஏற்படும் பிரச்சனை காரணமாக வர்த்தகர்கள் எதிர்நோக்கும் இடர்ப்பாடுகளை ("காசு வதை") எடுத்துக்காட்டும். அடுத்த சிலைட்டிலுள்ள காணொளியினை ஓடவிடவும். காணொளியின் இறுதியில் அதே மாதிரியான கலந்துரையாடலில் ஈடுபடவும். பங்கேற்பாளரிடையேயிருந்து தொழில்முற்சியாளர்களைத் தெரிவுசெய்து (எவரேனுமிருப்பின்) அவர்களது அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளச் செய்வதற்கு பயிற்சியாளர்கள் ஊக்குவிக்கப்படுகின்றனர். | **தொடர்பு PPT: DFS 1-4**<br>இக்காணொளியின் இறுதியில் பயிற்சியாளர் திரையில் தோன்றுதல் வேண்டும் |
| காணொளியில் காட்டப்பட்டவாறு, காசைப் பயன்படுத்தும் போது வாடிக்கையாளரினாலும் தொழில்முயற்சியளரினாலும் எதிர்நோக்கப்பட்ட பல்வேறு பிரச்சனைகள் பற்றி சுருக்கமாகக் கலந்துரையாடுக. | **தொடர்பு PPT: DFS 1-5** |
| காசுக் கொடுப்பனவுகளுக்கு மாறாக எளிமையான, பாதுகாப்பான மற்றும் உடனடியான வழிகளில் கொடுப்பனவுகளைச் செய்வதன் மூலம் இப்பிரச்சனைகளை வெற்றி கொள்ளலாம் எனத் தெரிவித்து சிலைட்டினைக் காட்சிப்படுத்தி சுருக்கமாகக் குறிப்பிடவும். | **தொடர்பு PPT: DFS 1-6** |
| டிஜிட்டல் கொடுப்பனவுகளைச் செய்வதற்கு பயன்படுத்தப்படுகின்ற வேறுபட்ட கருவிகளைத் தெரிவுசெய்து அவை பற்றி விளக்க சிலைட்டினைப் பயன்படுத்தவும். இவை அமர்வுச் செய்முறையின் போது விபரமாக ஆராயப்படும் என்பதனைப் பங்கேற்பாளர்களுக்கு அறிவிக்கவும். | **தொடர்பு PPT: DFS 1-7** |
| இணையவழிக் கொடுப்பனவுகளையும் அட்டையை அடிப்படையாகக் கொண்ட கொடுக்கல்வாங்கல்களையும் சுருக்கமாக விளக்குக. | |
| டிஜிட்டல் நிதிக்காக இலங்கை மத்திய வங்கியினாலும் நிதி நிறுவனங்களினாலும் வழங்கப்படும் தூண்டுதல் பற்றி சுருக்கமாகக் குறிப்பிடவும். | **தொடர்பு PPT: DFS 1-8** |

## C. இணையவழிக் கொடுப்பனவுகள் (5 நிமிடங்கள்)

| பயிற்சி வழங்கலுக்கான படிப்படியான வழிகாட்டல் | தொடர்பான மூலப்பொருட்கள் மற்றும் அறிவுறுத்தல்கள் |
| --- | --- |
| பயிற்சியின் முதல் பகுதி இணையவழியில் கொடுக்கல் வாங்கல்களைச் செய்யும் வழிமுறைகள் பற்றியதாகும். | **தொடர்பு PPT: DFS 1-9** |
| சிலைட்டில் குறிப்பிடப்படுகின்ற கொடுப்பனவுகளுக்கான 3 முறைகள் பற்றி சுருக்கமாகக் குறிப்பிடவும். | **தொடர்பு PPT: DFS 1-10** |

## D. இணையத்தள வங்கித்தொழில் (10 நிமிடங்கள்)

| பயிற்சி வழங்கலுக்கான படிப்படியான வழிகாட்டல் | தொடர்பான மூலப்பொருட்கள் மற்றும் அறிவுறுத்தல்கள் |
| --- | --- |
| இணையத்தள வங்கித்தொழிலை அறிமுகப்படுத்தவும். டிஜிட்டல் நிதியியல் கொடுக்கல்வாங்கல்களை நிறைவு செய்வதற்கு எளிமையான, பாதுகாப்பான மற்றும் உடனடியான வழியொன்றாக இதனை விபரிக்கவும். பங்கேற்பாளர்கள் வங்கிகளுக்கோ அல்லது நிதியியல் நிறுவனங்களுக்கோ செல்லாமலே அவர்களது நடைமுறை அல்லது சேமிப்புக் கணக்கிலுள்ள பணத்தினை அணுகுவதற்கு இதனைப் பயன்படுத்த முடியும். | **தொடர்பு PPT: DFS 1-11** |
| வியாபாரச் சொந்தக்காரர்களும் வாடிக்கையாளர்களும் இணையத்தள வங்கித்தொழிலைப் பயன்படுத்தி, இணையத்தளத்துடன் இணைக்கப்பட்ட திறன் தொலைபேசி, Laptop கணனி முகத்திரை மற்றும் டப்லட்டுகள் (Tablets) என்பனவற்றுடன் கூடிய ஏதேனும் கருவியைப் பயன்படுத்தி, நிதியியல் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்ள முடியும் என்பதனைக் குறிப்பிடவும். | |
| வாடிக்கையாளர்களும் வர்த்தகர்களும் அவர்களது நிதியியல் நிறுவனத்தின் பாதுகாப்பான வெப்தளத்தினூடாக அவர்களது கணக்குகளை அணுகவும் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்ளவும் முடியும். சிலைட்டினைப் பயன்படுத்தி இணையத்தள வங்கித்தொழிலினூடாகப் பங்கேற்பாளர்கள் மேற்கொள்ளக்கூடிய பல்வேறுபட்ட கொடுக்கல்வாங்கல்களை விளக்கவும். முன்னர் குறிப்பிடப்பட்டிருக்கும் காசினைப் பயன்படுத்துகின்ற தொல்லையுடன் கலந்துரையாடலை நீங்கள் இணைத்து வரிசையில் காத்திருத்தல் அல்லது பாதுகாப்பு இடர்நேர்வுகள் பற்றி கலந்துரையாடலாம். | |
| இணையத்தள வங்கித்தொழிலை தமது வாடிக்கையாளர்களுக்கு வழங்குகின்ற வங்கிகளினதும் நிதியியல் நிறுவனங்களினதும் பட்டியலைக் குறிப்பிடவும். இப்பட்டியல் கிரமமான முறையில் மாற்றமடையும் என்பதனையும் அவர்களுக்கு நினைவூட்டவும். | **தொடர்பு PPT: DFS 1-12**<br>பயிற்சியாளர் திரையில் தோன்றுதல் வேண்டும் |

## E. செல்லிடத் தொலைபேசி வங்கித்தொழில் செயலிகள் (10 நிமிடங்கள்)

| பயிற்சி வழங்கலுக்கான படிப்படியான வழிகாட்டல் | தொடர்பான மூலப்பொருட்கள் மற்றும் அறிவுறுத்தல்கள் |
|---|---|
| மற்றொரு மாற்று டிஜிட்டல் கொடுப்பனவு முறையான - செல்லிடத் தொலைபேசி வங்கித்தொழில் செயலிகளை Apps அறிமுகப்படுத்தல். இவற்றினை Wifi இணைப்புடன் திறன் தொலைபேசிக்கு அல்லது டப்லட்டுக்கு பதிவிறக்கம் செய்து கொள்ள முடியும். | **தொடர்பு PPT: DFS 1-13** |
| சந்தையில் கிடைக்கத்தக்க சில உதாரணங்களை சிலைட் எடுத்துக்காட்டுகிறது. | **தொடர்பு PPT: DFS 1-14** |
| சிலைட்டில் எடுத்துக்காட்டப்பட்டவாறு, இச்செயலிகளைப் பயன்படுத்திச் செய்யக்கூடிய கொடுக்கல்வாங்கல் வகைகளைக் குறிப்பிடவும். | **தொடர்பு PPT: DFS 1-15** |
| வரிசையில் காத்திருந்து பல மணி நேரங்களை வீணடிக்காமல் செல்லிடத் தொலைபேசி செயலியினூடாக பட்டியல்களை எவ்வாறு சுலபமாகச் செலுத்த முடியும் என்பது பற்றிய காணொளியினை ஓடவிடவும். காணொளி முடிவடைந்ததைத் தொடர்ந்து செயலியூடாகக் கொடுப்பனவுகளைச் செய்வதற்கு இவை எவ்வளவு சுலபமானவை என்பது பற்றி பங்கேற்பாளர்களிடம் கேட்கவும். | **தொடர்பு PPT: DFS 1-16** |
| தாள்களையும் குற்றிகளையும் பயன்படுத்தும் போது ஏற்படும் காசுத் தொல்லைகள் ("காசு வதை") பற்றி பங்கேற்பாளர்களுக்கு நினைவூட்டவும். மேலும் செல்லிடத் தொலைபேசி வங்கித்தொழில் செயலிகள் அத்தகைய சிரமங்களை தவிர்க்க உதவும். | |
| இணையவழி வங்கித்தொழில் சேவைகள் எங்கள் வாழ்க்கையை இலகுபடுத்துகிறது என்பதனை இறுதியாகக் குறிப்பிடுவதன் மூலம் பங்கேற்பாளர்களை அது பற்றி முயற்சிக்குமாறும் கேட்டுக் கொள்ளவும். எனினும், இவற்றை அவர்கள் பொறுப்புடன் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென குறிப்பிடப்படுகிறது. அத்துடன் இந்த விடயங்களையும் பயிற்சியில் உள்ளடக்குதல் வேண்டும். | **தொடர்பு PPT: DFS 1-17** |

## F. செல்லிடத் தொலைபேசி வங்கித்தொழில் கொடுப்பனவுச் செயலிகள் (15 நிமிடங்கள்)

| பயிற்சி வழங்கலுக்கான படிப்படியான வழிகாட்டல் | தொடர்பான மூலப்பொருட்கள் மற்றும் அறிவுறுத்தல்கள் |
|---|---|
| திறன் தொலைபேசியின் மீது பதிவிறக்கம் செய்து கொள்ளக்கூடிய குறித்துரைக்கப்பட்ட செயலியைப் பயன்படுத்தி சந்தையில் பொருட்கள் மற்றும் பணிகளுக்கான கொடுப்பனவுகளைச் செய்வதற்கான இலகுவானதும் பாதுகாப்பானதுமான வழிகள் இருப்பதனைக் குறிப்பிடவும். சிறிய பெறுமதியினைக் கொண்ட கொடுக்கல்வாங்கல்களுக்காக அத்தகைய சேவைகளின் முக்கியத்துவத்தினை விளக்குதல். எடுத்துக்காட்டாக, டிஜிட்டல் நிதியியல் சேவைகள் அனைத்தையுமுள்ளடக்கியிருப்பதுடன் பாரிய பெறுமதிக் கொடுக்கல்வாங்கல்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டிருக்கவில்லை. இவ் டிஜிட்டலை நிதிச் சேவைகளினூடாக மீன் வியாபாரிகள் மற்றும் இளநீர் விற்பனையாளர்களுக்கும் கூடக் கொடுப்பனவுகளை மிக வசதியாகச் செய்யலாம். கையில் சரியான தொகைக்கு கொடுப்பனவுகளைச் செய்ய பணமில்லாவிட்டாலும் கூட வாடிக்கையாளர் தற்பொழுது சரியான தொகைக்கு கொடுப்பனவுகளைச் செய்ய முடிவதனால் கடைக்காரரினால் போதுமான சில்லறைகள் இல்லாமையால் அடிக்கடி எதிர்நோக்கப்படும் பிரச்சனைகள் கட்டுப்படுத்தப்படுகின்றன. | பயிற்சியளிப்பவர் திரையில் தோன்றுதல் வெண்டும். |
| நாங்கள் இங்கு ஆராயவுள்ள இரண்டு முக்கிய செயலிகள் பற்றிக் குறிப்பிடவும்:<br>• JustPay<br>• LANKAQR | **தொடர்பு PPT: DFS 1-18** |
| JustPay என்பது தகவல்களைப் பரிமாற்றவும் பயன்படுத்திக் கொள்ளக்கூடியதுமான தன்மையினை உருவாக்குவதற்கு, உலகின் செல்லிடத் தொலைபேசி செயலிகளுக்குப் பின்னால் தொழிற்படுகின்ற உட்கட்டமைப்பாகும். இவ்வசதியின் மூலம் நீங்கள் உங்கள் தன்னியக்கக் கூற்றுப் பொறி அட்டைகளை, விரும்பிய வேறுபட்ட வங்கிகளின் தன்னியக்கக் கூற்றுப் பொறிகளில் பயன்படுத்திக் கொள்ளமுடியும். எந்தவொரு வணிகருடனும் இணைப்பினைக் கொண்டுள்ள எந்தவொருச் சேவைகளுக்கும் கொடுப்பனவுகளை மேற்கொள்ள உங்கள் செல்லிடத் தொலைபேசி வங்கித்தொழில் செயலிகளைப் பயன்படுத்திக் கொள்ளமுடியும். JustPay யினால் இயலுமைப்படுத்தப்பட்ட தற்போதைய வரையறை கொடுக்கல்வாங்கலொன்றிற்கு ரூ.50,000 ஆகும் (மேலே பூர்வாங்க அறிவுறுத்தல்களில் அறிவிக்கப்பட்டவாறு பயிற்சியளிப்பவர் பிந்திய விதிகள் பற்றி லங்காகிளியர் வெப்தளத்துடன் சரிபார்த்துக் கொள்ளுதல் வேண்டும்). பதிவிறக்கம் செய்வதற்கும் அச்சேவைகளைப் பயன்படுத்திக் கொள்வதற்குமாக வழங்கப்பட்ட தொடர்பான செல்லிடத் தொலைபேசி வங்கித்தொழில் செயலிகள் பற்றி பங்கேற்பாளர்கள் அவர்களது வங்கிகளுடன் சரிபார்த்துக் கொள்ளுமாறு அறிவித்தல் வேண்டும்.<br><br>இப்பொழுது, தொடர்பான சிலைட்டிலுள்ள காணொளி மீது சபையோரின் கவனத்தினை ஈர்த்தல் வேண்டும்.<br><br>வணிகர்கள் இவ்வசதியை அனுபவிப்பது தொடர்பில் விளக்குதல், அவர்கள் தமது வங்கிகளுடன் எளிய முறையில் இணைக்கப்படுவது அவசியமென்பதுடன் இச்சேவைகளுக்காகப் பதிவுசெய்தல் வேண்டும். பதிவுசெய்யப்பட்டதும் அவர்களது வங்கி, வணிகர் அடையாளத்தினை (இலக்கத்தினை) வழங்கும். இதனை அவர்கள் வாடிக்கையாளர்களுக்கு காட்சிப்படுத்தல் வேண்டும்.<br><br>பணத்தினைப் பெற்றுக்கொள்வதனை இயலுமைப்படுத்துகின்ற விதத்தில் வியாபாரத்தினை மேற்கொள்கின்ற ஆளொருவர் எந்தவொரு செயலிகளையும் பயன்படுத்தத் தேவையில்லை. குறுந்தகவல் வசதிக்காக மாத்திரம் பதிவுசெய்து கொண்டால் போதுமானது. இதன் மூலம் கொடுப்பனவுகள் இடம்பெறும் போது அவர்கள் கவனித்துக் கொள்ள முடியும். | **தொடர்பு PPT: DFS 1-19 இலிருந்து 1-20 வரை** |

| பயிற்சி வழங்கலுக்கான படிப்படியான வழிகாட்டல் | தொடர்பான மூலப்பொருட்கள் மற்றும் அறிவுறுத்தல்கள் |
|---|---|
| QR குறியீட்டின் படத்தினை சிலைட்டில் காட்டி இதற்கு முன்னர் இதனைப் பார்த்ததுண்டா எனப் பங்கேற்பாளர்களைக் கேட்கவும். | **தொடர்பு PPT: DFS 1-21** |
| எவரேனும் QR குறியீட்டினைப் பார்த்திருப்பவர்களாயிருப்பின் அவர்களின் கையினை இணையவழியில் உயர்த்துமாறு கேட்டுக் கொள்ளவும். | |
| QR குறியீட்டினைப் பார்த்த பங்கேற்பாளர்கள் ஒன்று அல்லது இரண்டிற்கும் கூடுதலானவர்களாக இருப்பின் அவர்களில் ஒருவருடன் சுருக்கமான சம்பாஷணையில் ஈடுபடவும். அவர்கள் இதனை எங்கே பார்த்தார்கள் என்பது பற்றியும் அவற்றின் நோக்கம் பற்றியும் விசாரிக்கவும். | |
| பங்கேற்பாளர்களிடையே யார் சொந்தமாக வியாபாரம் செய்கிறீர்கள் எனக் கேட்டு இக்குறியீடு பற்றி கேள்விப்பட்டதுண்டா என வினவும் அல்லது இல்லையெனில் நிதி நிறுவனமொன்றினால் இதன் பயன்பாடு தொடர்பில் நீங்கள் அழைக்கப்பட்டதுண்டா என்பதனை வினவவும். | |
| இக்குறியீட்டினை எவரேனுமாள் பயன்படுத்துகின்றவிடத்து அத்தகைய குறியீட்டினை எதற்காகப் பயன்படுத்துகின்றார் எனக் கேட்கவும். | |
| இக்கலந்துரையாடலைத் தொடர்ந்து, வாடிக்கையாளர் காசிற்குப் பதிலாகக் கொள்வனவிற்கு QR குறியீட்டினைப் பயன்படுத்த முடியும் என்பது பற்றியும் வர்த்தகர்கள் அவர்களது பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான கொடுப்பனவுகளைப் பெற அவற்றைப் பயன்படுத்த முடியும் என்பது பற்றியும் விளக்கவும். | **தொடர்பு PPT: DFS 1-22** |
| QR குறியீட்டினைப் பயன்படுத்திக் கொடுப்பனவுகளைச் செய்ய முடியும் என்பது பற்றியும் லங்காகியூஆர் இனை எவ்வாறு பெற்றுக்கொள்வது என்பது பற்றியும் பங்கேற்பாளர்களுக்கு அறிவிக்கவும். | |
| கியூஆர் குறியீட்டினைப் பயன்படுத்திக் கொடுப்பனவுகளைச் செய்வதற்கு வாடிக்கையாளர்களுக்கு திறன் தொலைபேசி தேவைப்படுகின்றதெனினும், வர்த்தகர்களுக்கு வர்த்தகரின் வங்கிக் கணக்கிற்கு நேரடியாகச் செலுத்தப்படுகின்ற கொடுப்பனவுகளைப் பெறுவதற்கு அவர்களது வங்கியிலிருந்தான QR குறியீடு மட்டுமே தேவைப்படுகிறது. இக் QR குறியீட்டினை வியாபாரப் பணிமனையின் ஓரிடத்தில் எளிய முறையில் காட்சிப்படுத்தி வைப்பது அவசியமாகும். | |
| LankaQR இனைப் பயன்படுத்தி கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுவதற்கான வசதிகள் வங்கிகள், வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள், செல்லிடத் தொலைபேசிகளை அடிப்படையாகக் கொண்ட டிஜிட்டல் கொடுப்பனவு நுழைவு வழிகளை வழங்குவோர், QR குறியீட்டுச் சேவைகளை வழங்குவதற்காக இலங்கை மத்திய வங்கியிலிருந்து ஒப்புதலைப் பெற்ற பின்டெக் இனை அடிப்படையாகக் கொண்ட செல்லிடத் தொலைபேசிக் கொடுப்பனவு நுழைவு வழி வசதிகளை வழங்குவோர் பற்றிய விபரங்கள் தொடர்பான சிலைட்டில் தரப்பட்டுள்ளன. | **தொடர்பு PPT: DFS 1-23 இலிருந்து 1-26 வரை** |
| QR குறியீடு பெறப்படும் பொழுது கொடுக்கல்வாங்கல் பற்றிய இற்றைப்படுத்தலுக்காக SMS வசதியை வியாபாரிகள் செயற்படுத்திக் கொள்ளல் வேண்டும். | |
| QR குறியீடு எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது என்பதனை எடுத்து விளக்குவதற்கான சந்தர்ப்பமொன்றாக பயிற்சியளிப்பவர் இதனைப் பயன்படுத்திக் கொள்ள முடியும். பயிற்சியளிப்பவர் காணொளியினூடாக இதனைப் பார்வையிடுமாறு சபையோரைக் கேட்டுக் கொள்ள முடியும். | **தொடர்பு PPT: DFS 1-27** |
| அமர்வின் இறுதியில் இச்சேவைகள் பற்றி அவர்களே அறிந்து கொள்ள வேண்டுமென சபையினர் ஊக்குவிக்கப்படுகின்றனர். | **தொடர்பு PPT: DFS 1-28** |

## G. எவ்வாறு டிஜிட்டல் நிதியியல் கொடுக்கல்வாங்கல்களை பாதுகாப்பான முறையில் மேற்கொள்வது (10 நிமிடங்கள்)

| பயிற்சி வழங்கலுக்கான படிப்படியான வழிகாட்டல் | தொடர்பான மூலப்பொருட்கள் மற்றும் அறிவுறுத்தல்கள் |
| --- | --- |
| ➤ குறிப்பாக, பணத்தினைக் கையாளும் போது பாதுகாப்புடனும் எச்சரிக்கையுடனும் இருப்பது எப்பொழுதும் முக்கியமானது என்பதனைக் கலந்தாராயவும். | **பயிற்சியளிப்பவர் திரையில் தோன்றுதல் வெண்டும்.** |
| ➤ காசினைப் பயன்படுத்தும் போது நாம் கவனமாக இருப்பது போன்று டிஜிட்டல் முறையில் கொடுக்கல்வாங்கல்களைச் செய்யும் போதும் மிகக் கவனமாக இருத்தல் வேண்டும். இது தொடர்பில் நாம் அடுத்த நல்ல பழக்கவழக்கங்கள் பற்றி பயில விரும்புவது பற்றி அறிவித்தல் வேண்டும். | |
| ➤ அச்சிலையிட்டிலுள்ள கேள்விகள் பற்றி பங்கேற்பாளர்களிடம் கேட்டுக் கொள்ளுதல். | **ஷூம் நடவடிக்கை - தொடர்பு PPT: DFS 1-31 இலிருந்து 1-34** |
| ➤ Zoom தொடர்பான 'கருத்துக் கணிப்பினைப்' (பொல்) பயன்படுத்துவதன் மூலம் பங்கேற்பாளர்கள் 'ஆம்' அல்லது ஷஇல்லை' என்ற பதிலை வழங்க முடியும். | |
| ➤ கருத்துக் கணிப்புத் தேர்வினைப் பயன்படுத்தி ஒவ்வொரு வினாவிற்கும் விடையளிப்பதற்கு பங்கேற்பாளர்களுக்கு வாய்ப்புக்களை வழங்கவும். ஒவ்வொரு கேள்விக்கும் பங்கேற்பாளர்கள் தமது விடையினைத் தெரிவுசெய்து 'சமர்ப்பித்தல்' பொத்தானை அழுத்தி அவற்றைச் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளவும். | |
| ➤ கேள்விகளுக்கு எல்லோரும் விடையளித்ததும், கேள்விக்காக பெறப்பட்ட பதிலிறுப்புக்களின் விபரம் திரையில் வரும்.<br>➤ ஒவ்வொரு கேள்விக்கும் இந்நடைமுறையினைத் திரும்ப திரும்ப பின்பற்றவும். | |
| ➤ விடைகள் தொடர்பில் விளக்கங்கள் எதனையும் வழங்க வேண்டாம். எனினும், இக்கேள்விகளைப் பற்றி பின்னர் கலந்துரையாடல்கள் இடம்பெறும் என்பதனைப் பங்கேற்பாளர்களுக்குத் தெரியப்படுத்தவும். | |
| ➤ அனைத்துக் கேள்விகளையும் கேட்டு முடிந்ததும் அங்கு ஐந்து சிறந்த பழக்கவழக்கங்களும் மூன்று தீய பழக்கவழக்கங்களும் காணப்படுவதாகவும் குறிப்பிட்டு விடையத்தினை தொகுத்துத் தரவும். இது பற்றி பின்னர் கலந்துரையாடப்படும். | **தொடர்பு PPT: DFS 1-33** |
| ➤ ஐந்து சிறந்த பழக்கவழக்கங்கள் பற்றி விளக்கவும். உங்கள் விளக்கத்தினை முன்னர் கேட்கப்பட்ட கேள்வியுடன் இணைத்துக் கொள்ளவும். | **தொடர்பு PPT: DFS 1-34** |

| பயிற்சி வழங்கலுக்கான படிப்படியான வழிகாட்டல் | தொடர்பான மூலப்பொருட்கள் மற்றும் அறிவுறுத்தல்கள் |
|---|---|
| 3 தீய பழக்கவழக்கங்கள் பற்றி விளங்கவும். உங்கள் விளக்கத்தினை முன்னர் கேட்கப்பட்ட கேள்விகளுடன் இணைத்துக் கொள்ளவும். | **தொடர்பு PPT: DFS 1-35** |
| அமர்வினைச் சுருக்கமாகத் தொகுத்து வழங்குகின்ற வேளையில் டிஜிட்டல் கொடுப்பனவுகளைப் பயன்படுத்துவது விரைவானதும் பாதுகாப்பானதும் என்பதனைத் தெரிவிக்க வேண்டும். நாம் எதனைப் பயன்படுத்துகிறோமோ அது பற்றியும் சிறந்த பழக்கவழக்கங்களை விடாது பின்பற்றுவது பற்றியும் தெரிந்திருத்தல் வேண்டும். | பயிற்சியளிப்பவர் திரையில் தோன்றுதல் வெண்டும். |
| பங்கேற்பாளர்கள் தமது அறிவினை நடைமுறைப்படுத்தும் விதத்தில் அவர்களது வங்கிகளையும் நிதியியல் நிறுவனங்களையும் சாத்தியமானளவிற்கு விரைவாக அடைவதன் மூலம் டிஜிட்டல் நிதியியல் சேவைகளுக்கு உங்கள் விருப்பத்தினைத் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். | |
| இவ்வமர்வு, அட்டையினை அடிப்படையாகக் கொண்ட கொடுக்கல்வாங்கல்கள் டிஜிட்டல் நிதியியல் கொடுக்கல்வாங்கல்களுக்குள் ஒரு வகையாகக் காணப்பட்ட போதும் அவை பற்றிக் கலந்தாராயப்படாது என்பது பற்றிக் குறிப்பிடவும். அவை அடுத்த அமர்வில் உள்ளடக்கப்படும். அடுத்த அமர்வில் கலந்து கொள்ளுமாறு (அட்டவணையிடப்படும் போது) பங்கேற்பாளர்களுக்கு அழைப்புவிடுத்து அவர்கள் எல்லோருக்கும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டு அமர்வினை முடித்துக் கொள்ளவும். | |



# அமர்வு இரண்டு - அட்டையை அடிப்படையாகக் கொண்ட கொடுக்கல்வாங்கல்கள்

**அமர்வு நேர அட்டவணை:** **காலம் - 60 நிமிடங்கள்**

| | அமர்வின் தலைப்பு | காலம் (நிமிடம்) | பக்க இல. |
|---|---|---|---|
| A | வரவேற்றல், அறிமுகப்படுத்தல் மற்றும் முன்னைய அமர்வு பற்றிக் குறிப்பிடல் (அதே பங்கேற்பாளராக இருக்குமிடத்து) | 10 | 23 |
| B | அட்டைக் கொடுப்பனவுகளுக்கான அறிமுகம் | 20 | 25 |
| C | அட்டைகள் பயன்படுத்தப்படுவதிலுள்ள அநுகூலங்களை அறிமுகப்படுத்தல் | 5 | 26 |
| D | அட்டைகளின் பண்புகளை அடையாளம் காணுதல் | 10 | 27 |
| E | அட்டைகளைப் பாதுகாப்பாகப் பயன்படுத்தல் | 10 | 28 |

## A. வரவேற்றல், அறிமுகப்படுத்தல் மற்றும் முன்னைய அமர்வு பற்றிக் குறிப்பிடல் (அதே பங்கேற்பாளராக இருக்குமிடத்து) (10 நிமிடங்கள்)

| பயிற்சி வழங்கலுக்கான படிப்படியான வழிகாட்டல் | தொடர்பான மூலப்பொருட்கள் மற்றும் அறிவுறுத்தல்கள் |
|---|---|
| ➤ பயிற்சியளிப்பவர் பயிற்சி ஆரம்பமாகும் நேரத்திற்கு குறைந்தபட்சம் 10 நிமிடங்களுக்கு முன்னதாக Zoom வழியூடாக கூட்டத்தில் இணைந்து கொள்ளுதல் வேண்டும். பயிற்சியாளர்கள் பங்கேற்பாளர்கள் Zoom வழியூடாக கூட்டத்தில் இணைந்து கொள்வதற்கு அனுமதித்தல் வேண்டும். | **தொடர்பு** PPT: DFS 2-1 |
| ➤ குறைந்தபட்சம் தேவையான அளவிற்கு பங்கேற்பாளர்கள் Zoom வழிக் கூட்டத்திற்கு வருகை தந்ததும் அமர்வினை ஆரம்பித்தல் வேண்டும். | பயிற்சியளிப்பவர் திரையில் தோன்றுதல் வெண்டும். |
| **கவனிக்கவும்**<br>• இரண்டாவது அமர்விற்கு பயிற்சியளிப்பவர் புதியவராக இருக்குமிடத்து அவர்கள் பயிற்சி ஆரம்பமாவதற்கு முன்னதாக தம்மைத் தாமே அறிமுகப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.<br>• இவ்விரண்டாவது அமர்வு வேறொரு நாளில் மேற்கொள்ளப்படுமிடத்து அல்லது சபையோர் புதியவர்களாக இருக்குமிடத்து பயிற்சியளிப்பவர் பயிற்சிபெறுபவர்களை இணையவழித் தளத்தினை எவ்வாறு பயன்படுத்துவது என்பது பற்றிய அறிவுறுத்தல்களை 'வரவேற்றல் மற்றும் அறிமுகப்படுத்தல்' பகுதியின் கீழ் பார்க்கலாம் என்பதனைக் குறிப்பிட வேண்டும். இல்லையெனில் "பரீட்சிப்பு" ஒன்றாக தளமூடாக கையை உயர்த்துமாறு பங்கேற்பாளர்களைக் கேட்கலாம். பெரும்பாலான பயிற்சியாளர்கள் தமது கைகளை சரியாக உயர்த்தினால் அவர்களின் முயற்சிகளைப் பாராட்டிக் கொண்டு, கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளும் செயற்பாட்டில் மட்டுமே கைகளை உயர்த்த வேண்டுமென்பதனை அவர்களுக்கு அறிவுறுத்தவும். | |
| ➤ முன்னைய அமர்வின் போது / நாளின் போது கலந்துடையாடப்பட்ட தலைப்புக்களை மீள நினைவூட்டல்<br>தலைப்புக்களைக் காட்சிப்படுத்தி இன்றைய நிகழ்ச்சித்திட்டம் முன்னைய அமர்வின் தொடர்ச்சி என்பதனை விளக்குதல். முன்னைய அமர்வில் கலந்துரையாடப்பட்ட விடயங்களின் சுருக்கமான தொகுப்பினை வழங்கல். | **தொடர்பு** PPT: DFS 2-2 |
| ➤ பங்கேற்பாளர்கள் "டிஜிட்டல் கொடுப்பனவுகளுக்கான அறிமுகம்" தொடர்புகள் நிகழ்ச்சித்திட்டத்தில் கலந்து கொள்ளவில்லையாயின் 'காசு வதை' காணொளியை ஓடவிடவும். | **தொடர்பு** PPT: DFS 2-3 |
| ➤ சபையோரைப் பொறுத்து பயிற்சியளிப்பவர் அமர்வு 1இல் காட்டப்பட்ட சிலைட்டுக்களை மீளக் காட்சிப்படுத்தும் போது கவனமாக இருத்தல் வேண்டும். இரண்டு அமர்வுகளும் குறுகிய காலத்திற்கிடையில் இடம்பெறுமிடத்து அதே சிலைட்டுக்களை காட்சிப்படுத்துவது தேவைப்படாது.<br>கொடுக்கல்வாங்கல்களுக்காக காசினைப் பயன்படுத்தும் போது வாடிக்கையாளர்களினாலும் வர்த்தகச் சொந்தக்காரர்களினாலும் எதிர்நோக்கப்படும் பிரச்சனைகளின் சாராம்சத்தினைத் தருகின்ற சிலைட்டினைக் காட்டுதல் மற்றும் அவை பற்றி சுருக்கமாக விளக்குதல். | **தொடர்பு** PPT: DFS 2-4 |
| ➤ காசினைப் பயன்படுத்தும் தொல்லைகளைத் தவிர்ப்பதற்கு (காசு வதை) எளிமையான பாதுகாப்பான, உடனடியான காசு கொடுக்கல்வாங்கல் வழிகள் இருப்பது பற்றி முன்னைய அமர்விலும் கூட நாம் பயின்றுள்ளமை பற்றி பயிற்சியளிப்பவர் குறிப்பிட முடியும். | **தொடர்பு** PPT: DFS 2-5 |
| ➤ காசிற்கான சிறந்த மாற்றுவழி யாதெனில் 'டிஜிட்டல் நிதியியல் கொடுப்பனவு முறைகளே' என்பதனை விளக்கவும். | |

| பயிற்சி வழங்கலுக்கான படிப்படியான வழிகாட்டல் | தொடர்பான மூலப்பொருட்கள் மற்றும் அறிவுறுத்தல்கள் |
| --- | --- |
| டிஜிட்டல் நிதியியல் கொடுக்கல்வாங்கல்களைச் செய்கின்ற 1. இணையவழிக் கொடுப்பனவுகள் மற்றும் 2. அட்டையினை அடிப்படையாகக் கொண்ட கொடுப்பனவுகளைப் பயன்படுத்தல் ஆகிய இரண்டு பிரதான மாதிரிகள் காணப்படுவது பற்றி பங்கேற்பாளர்களுக்கு நினைவூட்டவும். | **தொடர்பு PPT: DFS 2-6** |
| பங்கேற்பாளர்களுக்கு (பங்கேற்பாளர்கள் அதே குழுமத்தினைச் சேர்ந்தவர்களாக இருப்பின்) இணையவழிக் கொடுப்பனவுகள் முன்னைய அமர்வில் உள்ளடக்கப்பட்டமையினை நினைவூட்டவும். | பயிற்சியளிப்பவர் திரையில் தோன்றுதல் வெண்டும். |
| பங்கேற்பாளர்களிடமிருந்து அவர்களில் எத்தனை பேர் தொடர்பான வங்கிகளிலிருந்து அல்லது நிதியியல் நிறுவனங்களிலிருந்து அத்தகைய சேவைகள் பற்றி அல்லது முதல் நாள் ஆராயப்பட்ட விடயங்கள் பற்றி ஆராய்ந்திருக்கின்றனர் எனக் கேட்கவும். ஷூம் தோற்றம் அவர்களிடம் இருக்குமாயின் அதனைப் பயன்படுத்தி பங்கேற்பாளர்களைக் கையை உயர்த்தச் சொல்லவும் | |
| தொடர்பான வங்கிகள் அல்லது நிதியியல் நிறுவனங்களுடன் அவர்கள் இது பற்றி கலந்துரையாடாது இருப்பினும் கூட, டிஜிட்டல் நிதியியல் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கான விருப்பம் தொடர்பான அடிப்படை விடயங்கள் பற்றி அவர்களது குடும்ப உறுப்பினர்களுடன் கலந்துரையாடினார்களா என்பது பற்றி கேட்பதுடன் முன்னைய வினாவின்படி அவர்களை அடையாளம் காணவும். | |
| அவ்வாறு அடிப்படை விடயங்களை மேற்கொண்ட ஒரு சில பங்கேற்பாளர்களை அடையாளம் கண்டு அவர்கள் இதுவரை செய்த விடயங்கள் பற்றி குறுகிய கலந்துரையாடலொன்றில் ஈடுபடவும். | |
| பங்கேற்பாளர்களில் எவருமே அத்தகைய முன்முயற்சிகளெதனையும் எடுத்திராதுவிடின் அவ்வாறு செய்வதற்கு அவர்களுக்குப் போதுமான நேரம் கிடைக்கவில்லை எனக் குறிப்பிட்டு, இன்றைய அமர்வு முடிவடைந்ததும் அவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கூறவும். | |
| சிலைட்டினைத் திரையில் காட்சிப்படுத்தி கலந்துரையாடலை ஆரம்பிக்கவும். | **தொடர்பு PPT: DFS 2-6** |
| முன்னர் ஆராயப்பட்ட இணையவழிக் கொடுப்பனவுகள் போன்றே அட்டைகளும் மற்றொரு இலகுவான, பாதுகாப்பான மற்றும் உடனடியாக டிஜிட்டல் கொடுக்கல்வாங்கல் முறையொன்றாகும். | |
| இன்றைய அமர்வு அட்டையினை அடிப்படையாகக் கொண்ட கொடுக்கல்வாங்கல்கள் மீது கவனத்தினைச் செலுத்தும் என விளக்கவும். | **தொடர்பு PPT: DFS 2-7** |
| மிகப் பொதுவாக பயன்படுத்தப்படுகின்றவை என சிலைட்டில் காட்டப்பட்ட அட்டைகளின் மூன்று வகைகள் பற்றி விபரிக்கவும். | **தொடர்பு PPT: DFS 2-8** |
| பெறுமதி சேமிக்கப்பட்ட அட்டைகளை அறிமுகப்படுத்தி இதன் தொழிற்பாடு பற்று அட்டையைப் போன்றதே என்பதனைக் குறிப்பிடவும். எனினும், பற்று அட்டை போலன்றி பெறுமதி சேமிக்கப்பட்ட அட்டையை முன்கூட்டியே நிர்ணயிக்கப்பட்ட பெறுமதியொன்றிற்கு மட்டுமே நிரப்ப முடியும். | |
| அட்டையின் பெறுமதி முன்கூட்டியே நிரப்பப்படுவதனால் அட்டை உடமையாளர் கொடுக்கல்வாங்கல்களை வரையறுப்பதில் கட்டுப்பாடுகளைக் கொண்டிருக்கின்றார். ஆகவே, பெற்றோரின் கட்டுப்பாட்டின் கீழ் பிள்ளைகளின் செலவினங்களுக்கும் இணையவழிக் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்வதற்கும் இவ்வட்டை பயன்மிக்கதாக இருக்கும். இவ்வட்டையினை வெளிநாட்டிற்குப் பயணம் செய்யும் போதும் பயன்படுத்த முடியுமெனினும் அத்தகைய விடயத்தில் தொடர்ச்சியாக நிரப்பும் வசதிகள் கிடைக்கத்தக்கதாக இராது. | |

## B. அட்டைக் கொடுப்பனவுகளுக்கான அறிமுகம் (20 நிமிடங்கள்)

| பயிற்சி வழங்கலுக்கான படிப்படியான வழிகாட்டல் | தொடர்பான மூலப்பொருட்கள் மற்றும் அறிவுறுத்தல்கள் |
|---|---|
| கடன் அட்டைக்கும் பற்று அட்டைக்குமிடையிலான வேறுபாட்டினை விளக்கவும். | **தொடர்பு PPT: DFS 2-9** |
| பற்று அட்டை என்பது ஆளொருவரின் சொந்தக் கணக்கிலுள்ள பணத்தினை அட்டையினைப் பயன்படுத்திச் செலவிடுவது, கடன் அட்டை என்பது குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள் மீண்டும் செலுத்தப்பட வேண்டிய கடன் வசதி என்பதனை எடுத்து விளக்குதல். | |
| எப்பொழுதும் பற்று அட்டையினை முதலில் விளக்கவும். | |
| கடந்த காலத்தில் அட்டைகள் செல்வந்தர்களினால் மாத்திரமே பயன்படுத்த முடியும் என நாம் நம்பிக் கொண்டிருந்த போதும் தற்பொழுது பெரும்பாலும் எல்லோரும் அட்டைகளைப் பயன்படுத்த முடியும். | |
| இன்றைய அமர்வு பங்கேற்பாளர்களுக்கு அட்டைகள் பற்றிய அறிவினை வழங்கும் விதத்தில் ஊக்குவிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் அவற்றை அவர்கள் எவ்வாறு பயன்படுத்த முடியும் என்பது பற்றியும் குறிப்பிடல். | **தொடர்பு PPT: DFS 2-10** |
| வேறுபட்ட நிறுவனங்கள் கடன் அட்டைகளை வழங்க முடியும். இலங்கையில் கடன் அட்டைகளை வழங்கக்கூடிய நிறுவனங்கள் சிலைட்டில் காட்டப்பட்டுள்ளன. | **தொடர்பு PPT: DFS 2-11** |
| பயிற்சியாளர், சிலைட்டின்படி இலங்கையில் கடன் அட்டையொன்றிற்கு தகைமை பெறுவதற்கான அடிப்படையத் தேவைப்பாடுகள் பற்றி விளக்குதல் வேண்டும். | **தொடர்பு PPT: DFS 2-12** |
| மேலும், பயிற்சியளிப்பவர், சிலைட்டிலுள்ள விபரங்களின்படி, பிரதான கடன் அட்டை உரிமையாளர் அவரது கடன் அட்டை வரையறைக்குள் மற்றையவர்களின் சார்பில் துணை அட்டைகளையும் பெற்றுக்கொள்ள முடியுமென்பதனையும் விளக்குதல் வேண்டும். | **தொடர்பு PPT: DFS 2-13** |
| எவ்வாறெனினும், பயிற்சியளிப்பவர், இக்குறைந்தபட்ச தகைமையினை் கொண்ட ஆளொருவர் அவரது நாணய நம்பகத்தன்மையினை கடன் அட்டையை வழங்கும் நிதியியல் நிறுவனத்திற்கு நிரூபிக்க வேண்டும் என்பதனை வலியுறுத்தவும். தனிப்பட்ட ஒருவரின் நாணய நம்பகத்தன்மை கடன் அட்டையின் வரையறையினைத் தீர்மானிக்கும் என்பதுடன் இது வழங்கும் நிதியியல் நிறுவனத்தினால் உறுதிப்படுத்தப்பட்டிருக்கும். தனிப்பட்டவரின் நம்பகத்தன்மை தொடர்பான வரலாறும் மொத்த ஆண்டு வருமான மட்டமும் பரிசீலனையில் கொள்ளப்படும் முக்கிய காரணங்களாக இருக்கும் என்பதனை பயிற்சியாளர் இங்கே குறிப்பிடல் வேண்டும். | |

| பயிற்சி வழங்கலுக்கான படிப்படியான வழிகாட்டல் | தொடர்பான மூலப்பொருட்கள் மற்றும் அறிவுறுத்தல்கள் |
|---|---|
| ➤ இதன் பின்னர் பயிற்சியளிப்பவர், கடன் அட்டைகளைப் பயன்படுத்துவதிலுள்ள நன்மைகளை விளக்கமுடியும். | **தொடர்பு PPT: DFS 2-14** |
| ➤ சிலைட்டின் பக்கம் கவனத்தினைத் திருப்பவும். மாதமொன்றுக்கு எவ்வளவு தொகையினைத் தீர்ப்பனவு செய்யலாம் என்பதனைக் குறிப்பிடுமாறு பங்கேற்பாளர்களைக் கேட்கவும். அடுத்து, சிலைட்டிலுள்ளவாறு பிந்திய கொடுப்பனவிற்கு வட்டி எவ்வாறு கணிக்கப்படுகிறது என்ற சூத்திரத்தினை விளக்கவும்.<br>பங்கேற்பாளர்களுக்கு பின்வருவன பற்றி விளக்கவும்:<br>• வட்டியைத் தவிர்க்கும் விதத்தில் உங்கள் கொடுப்பனவுப் பட்டியலை சாத்தியமானளவிற்கு ஒவ்வொரு மாதமும் முழுமையாகச் செலுத்துங்கள்.<br>• பட்டியலை முழுமையாகச் செலுத்துமுடியவில்லையாயின், குறைந்தபட்சக் கொடுப்பனவுகளையாவது கூடுதலானளவிற்குச் செலுத்தவும்.<br>• உங்களது நாளாந்த நிலுவையினைக் குறைக்கும் விதத்தில் மாதமொரு முறை செலுத்துவதிலும் பார்க்கக் கூடுதலான தடவைகளில் கொடுப்பனவுகளைச் செய்யுங்கள்.<br>• உங்களது முழு நிலுவைகளையும் முழுமையாகச் செலுத்த முடியவில்லையாயின், தாமதக் கட்டணத்தினைத் தவிர்த்துக் கொள்ளும் விதத்தில் உங்களால் முடிந்த வரையிலான கொடுப்பனவுகளைச் செய்வதனைக் கருத்திற் கொள்வதுடன் வட்டிக்குட்படக்கூடிய ஒட்டுமொத்த நிலுவைகளைக் குறைத்துக் கொள்ளவும். | **தொடர்பு PPT:DFS 2-15 இலிருந்து 2-17 வரை** |

## C. அட்டைகள் பயன்படுத்தப்படுவதிலுள்ள அநுகூலங்களை அறிமுகப்படுத்தல் (5 நிமிடங்கள்)

| பயிற்சி வழங்கலுக்கான படிப்படியான வழிகாட்டல் | தொடர்பான மூலப்பொருட்கள் மற்றும் அறிவுறுத்தல்கள் |
|---|---|
| ➤ பயிற்சியளிப்பவர், உதாரணங்களைப் பயன்படுத்தி அட்டையை அடிப்படையாகக் கொண்ட கொடுக்கல்வாங்கல்களைப் பயன்படுத்தக்கூடிய சந்தர்ப்பங்களைச் சுருக்கமாக விளக்கவும். | **தொடர்பு PPT: DFS 2-18** |
| உதாரணம்:<br>நீங்கள் அல்லது உங்கள் குடும்ப உறுப்பினரொருவர் தனியார் வைத்தியசாலைக்கு விஜயம் செய்கின்றவிடத்து காணப்படும் உயர் மனஅழுத்தம் மிக்க சூழலைக் கற்பனை செய்யுங்கள், இத்தகைய சூழ்நிலைகளின் போது அவசரமாகக் கவனிக்க வேண்டிய மருத்துவ விடயங்களினால் மனத் தடுமாற்றங்களுக்குட்பட்டு மற்றைய எந்தவொரு விடயங்களின் மீது கவனம் செலுத்த முடியாமல் போகலாம். காசினைக் கொண்டு வரக்கூட நீங்கள் மறந்து போகலாம் அல்லது அவசரத்தில் தன்னியக்கக் கூற்றுப் பொறிகளை (ATM) அணுக முடியாதிருந்திருக்கலாம். அத்தகைய சந்தர்ப்பத்தில் கொடுப்பனவுகளைச் செய்ய குறிப்பாக, உங்கள் கடன் அட்டைகளைப் பயன்படுத்தலாம். உங்கள் கணக்கில் காசு இல்லாவிட்டாலும் கூட உங்களிடம் கடன் அட்டை இருக்குமானால் கடன் அடிப்படையில் கொடுப்பனவுகளைச் செய்துவிட்டு உங்கள் வங்கிக் கணக்குகளை இன்னொரு திகதியில் தீர்ப்பனவு செய்து கொள்ளமுடியும். | |

| பயிற்சியளிப்பவருக்கான படிப்படியான அறிவுறுத்தல்கள் | தொடர்பான மூலப்பொருட்கள் மற்றும் அறிவுறுத்தல்கள் |
| --- | --- |
| அட்டைகளைப் பயன்படுத்தும் வாடிக்கையாளர்களிடமிருந்து கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்வதனை இது இலகுபடுத்துவதனால் வியாபாரிகளுக்கும் இது சுலபமானது என்பதனைக் குறிப்பிடவும். | |
| வர்த்தகச் சொந்தக்காரர்கள் அட்டைக் கொடுப்பனவுகளைப் பெறத் தேவையான விற்பனை மையப் பொறியினை (POS) எவ்வாறு பெற்றுக்கொள்வது என்பது பற்றி அவர்களது வங்கிகளுடன் கலந்துரையாடுதல் வேண்டும். | |
| நியம அளவிலான விற்பனை மையப் பொறியினைப் பெற்றுக்கொள்வது இடர்ப்பாடானதாக இருப்பின், செல்லிடத் தொலைபேசியுடன் இணைக்கத்தக்க விற்பனை மையக் கருவி போன்ற கிடைக்கத்தக்க புதிய மாற்று முறைகள் பற்றி உங்கள் வங்கிகளுடன் ஆராயலாம். உண்மையில் QR குறியீடு போன்ற மாற்று ஏற்பாடுகளும் தற்பொழுது சாத்தியமானதே. | |

## D. அட்டைகளின் பண்புகளை அடையாளம் காணுதல் (10 நிமிடங்கள்)

| பயிற்சி வழங்கலுக்கான படிப்படியான வழிகாட்டல் | தொடர்பான மூலப்பொருட்கள் மற்றும் அறிவுறுத்தல்கள் |
| --- | --- |
| அட்டையைப் பயன்படுத்தும் போது, பற்று மற்றும் கடன் அட்டைகளின் தோற்றத்தில் காணப்படுகின்ற சில முக்கியமான பண்புகளைப் புரிந்து கொள்வது முக்கியமானதாகும். | **தொடர்பு PPT: DFS 2-19** |
| தொடர்பான சிலைட்டின் பண்புகளைச் சுருக்கமாக விளக்குக. பயிற்சியளிப்பவர் அட்டைகளின் பெரும்பாலான பண்புகள் அநேகமாக ஒரே மாதிரியானவை என்பதனை விளக்குதல் வேண்டும். வழமையாக கடன் அட்டைகள் வெளிக்கிளம்பிய இலக்கங்களைக் கொண்டிருக்கின்ற வேளையில் பற்று அட்டைகள் அச்சிடப்பட்ட இலக்கங்களையே கொண்டிருக்கும். இது இவற்றிடையேயான வேறுபாட்டினை இலகுவாகப் புரிந்து கொள்ளச் செய்கிறது. | **தொடர்பு PPT: DFS 2-20 இலிருந்து 2-29 வரை** |
| பயிற்சியளிப்பவர் சரியான இடத்தினை அதாவது ஒவ்வொரு பண்புகளும் காணப்படக்கூடிய முன்பக்கம், பின்பக்கம் போன்ற இடங்களில் கவனத்தினைச் செலுத்தவும் வேண்டும். உ-ம்: CVS இலக்க அட்டையின் பின்பக்கம் காணப்படுகிறது. பயிற்சியளிப்பவர் அட்டையினைப் பயன்படுத்தும் போது இத்தகவல்கள் எவ்வாறு பயன்மிக்கதாக விளங்குகின்றன என்பதனை விளக்குதல் வேண்டும். | |
| தனிப்பட்ட அடையாள இலக்கத்தின் (PIN) முக்கியத்துவத்தினை எடுத்துக்காட்டுதல் வேண்டும். | **தொடர்பு PPT: DFS 2-30** |

## E. அட்டைகளைப் பாதுகாப்பாகப் பயன்படுத்தல் (10 நிமிடங்கள்)

| பயிற்சி வழங்கலுக்கான படிப்படியான வழிகாட்டல் | தொடர்பான மூலப்பொருட்கள் மற்றும் அறிவுறுத்தல்கள் |
|---|---|
| கொடுப்பனவுகளைச் செய்வதற்கு அட்டைகளைப் பயன்படுத்தும் போது நாம் பாதுகாப்பாக இருப்பது மிக முக்கியமானது என்பதனைப் பங்கேற்பாளர்களுக்கு நினைவூட்டிக் கொண்டு இவ்வமர்வினைத் தொடங்கவும். | பயிற்சியளிப்பவர் திரையில் தோன்றுதல் வேண்டும். |
| கவனிக்கப்பட வேண்டிய இரண்டு விடயங்கள் காணப்படுகின்றன. பின்பற்றப்பட வேண்டிய ஒழுங்குமுறை மற்றும் பின்பற்றப்பட வேண்டிய விடயங்கள். | |
| விடய ஆய்வினைக் காட்சிப்படுத்தவும். பங்கேற்பாளர்கள் விடைகளை ஆயத்தப்படுத்துவதற்கும் நேரத்தினை வழங்கல். | **தொடர்பு PPT: DFS 2-31** |
| பயிற்சியளிப்பவர் விடய ஆய்வு பற்றி பயிற்சிபெறுபவர்களில் ஒரு சிலருடன் குறுகிய கால கலந்துரையாடல்களில் ஈடுபடல் வேண்டும். பயிற்சியளிப்பவர் கலந்துரையாடுகின்ற போது ஒரு அட்டையினை மற்றைய ஒருவருக்கு வழங்குவது பொதுவானது தான் என்றாலும் அது வரவேற்கத்தக்கதொன்றல்ல என்பதனை கலந்துரையாடலில் குறிப்பிடவும். பயிற்சியளிப்பவர் அட்டையினை இன்னொருவரிடம் கையளிப்பது அல்லது பற்று அட்டையின் தனிப்பட்ட அடையாள இலக்கத்தினை (PIN) வழங்குவது பாதுகாப்பு இரும்புப் பெட்டகத்தின் சாவியை மற்றையவரிடம் கையளிப்பதற்குச் சமமாகும் என்பதனை விளக்குதல் வேண்டும். | |
| இதேபோன்று, எஞ்சிய விடய ஆய்வுகளையும் ஆராயவும். பயிற்சியளிப்பவர் கடன் முகாமைத்துவத்தின் முக்கியத்துவத்தினை, பயிற்சியளிப்பவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருதல் வேண்டும். மேலே குறிப்பிடப்பட்டவாறு, முதலில் பாரிய கடன் வசதிக்கான வரையறையினை நீங்கள் கொண்டிருக்கின்றீர்கள் என்பதற்காக, எவ்வாறு கடனைத் தீர்ப்பனவு செய்யப்போகிறோம் என்ற தெளிவான திட்டமெதனையும் கொண்டிருந்தாலொழிய, கடன் அட்டையைப் பயன்படுத்திப் பயணத்தினைச் செலவிடக்கூடாது. தாமதமான கொடுப்பனவுக் கட்டணம் பற்றியும் வெளிநிற்கும் நிலுவைகளுக்கெதிராக விதிக்கப்படும் மிக உயர்ந்த வட்டி வீதம் பற்றியும் கவனம் செலுத்தவும். | **தொடர்பு PPT: DFS 2-32 இலிருந்து 2-33 வரை** |
| விடய ஆய்வுகளிலிருந்து அறிந்து கொண்டதன்படி, சிலைட்டுக்களில் குறிப்பிடப்பட்டவாறு அட்டைகளைப் பயன்படுத்தும் போது பங்கேற்பாளர்கள் சிறந்த பழக்கவழக்கங்களைப் பின்பற்றுதல் வேண்டும். | **தொடர்பு PPT: DFS 2-34 இலிருந்து 2-35 வரை** |
| காசைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக மாற்று முறைகளை அதாவது கடன் மற்றும் பற்று அட்டைகளைப் பயன்படுத்துவது பற்றி பயிற்சியாளர் நினைவூட்டுதல் வேண்டும். காசு அச்சிடல், தூய்மைப்படுத்தல், கொண்டு செல்லல் போன்றவற்றுடன் தொடர்புபட்டிருப்பதனால் அது பொருளியல் செலவுகளை ஏற்படுத்தும் என்பது பற்றி குறிப்பிடல் வேண்டும். | பயிற்சியளிப்பவர் திரையில் தோன்றுதல் வெண்டும். |
| டிஜிட்டல் கொடுப்பனவு முறைகள் சிறந்த மாற்று வழிமுறைகளாகும். பங்கேற்பாளர்கள் டிஜிட்டல் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு அவர்களை ஊக்குவிக்கவும். அதேவேளை பாதுகாப்பினையும் கவனத்தினையும் மனதில் கொள்வது அதைவிட முக்கியமானதாகும். | |

# வகுப்பறைப் பயிற்சி

## பூர்வாங்க அறிவுறுத்தல்கள் மற்றும் பங்கேற்பாளர்களை வரவேற்றல் :

**பயிற்சிக் காலத்தின் போது வினைத்திறனையும் நேர முகாமைத்துவத்தினையும் உறுதிப்படுத்துவதற்காக, தயவுசெய்து இவ்வழிகாட்டல்களைப் பின்பற்றவும்.**

- இப்பயிற்சியளிப்பவர் இவ்வழிகாட்டலுக்குப் புறம்பாக, பயிற்சியளிப்பவர் JustPay, LankaQR போன்ற புதிய கொடுப்பனவு முறைகளுடன் தொடர்பான பண்புகள், கொடுக்கல்வாங்கல் வரையறைகள் மற்றும் ஒழுங்குவிதிகள் பற்றி தானாகவே பரீட்சயப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். கைநூல், அது, பிரசுரிக்கப்படுகின்ற திகதியிலுள்ளவாறான தகவல்களை வழங்குகின்ற அதேவேளையில் சந்தைத் தேவைப்பாடுகளுக்கேற்ப அதற்கு இற்றைப்படுத்தல்கள் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றன (லங்காகிளியர் - https://www.lankaclear.com/, இலங்கை மத்திய வங்கி - https://www.cbsl.gov.lk/).
- பயிற்சியளிப்பவர், பரீட்சிப்புப் பட்டியலின்படி (இணைப்பு X) பயிற்சிக்குத் தேவையான சாதனங்கள்/கருவிகள் ஆயத்தமாக இருப்பதனை முன்கூட்டியே உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும். அடிப்படை ஒழுங்குவிதிகளின் சுவரொட்டிகள் மற்றும் பவர் பொயின்டின் வரவேற்பு விளம்பர பலகைகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளமையினை உறுதிப்படுத்தல் வேண்டும்.
- பங்கேற்பாளர்கள் வருகை தருவதற்கு முன்னதாக, பயிற்சியளிப்பவர் இருக்கைகள் குழுக்களாக ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளமையினை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். குழுக்களின் இலக்கங்கள் 1 இலிருந்து 5 வரை என்றவாறு காட்சிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.
- பங்கேற்பாளர்கள் வருகை தந்ததும் பயிற்சியளிப்பவர் தனித்தனியாக ஒவ்வொரு குழுக்களுக்கும் அதனை வழங்குதல் வேண்டும்.
- சிற்றூண்டிகள் ஒழுங்குசெய்யப்பட்டிருக்கின்றவிடத்து, பயற்சியளிப்பவர் அவை கிடைக்கத்தக்கதாக இருப்பது பற்றி பங்கேற்பாளர்களுக்கு அறிவித்தல் வேண்டும். பயிற்சியளிப்பவர் அமர்வுகளுக்கிடையிலான இடைவேளை அதேபோன்று சிற்றூண்டி இடைவேளைக்கான நேரம் பற்றி பயிற்றுவிப்பு ஒழுங்கமைப்பினரின் ஆலோசனையுடன் ஒழுங்குகளை மேற்கொள்ளல் வேண்டும். ஒரு நாளுக்கான நிகழ்ச்சிநிரல் சிற்றூண்டிப் பரிமாறலுடன் ஆரம்பிக்குமாயின், அமர்வுகள் ஆரம்பமாகும் நேரத்தினை உறுதிப்படுத்தும் விதத்தில் பயிற்சிபெறுபவர்களுக்கு அது பற்றி அறிவித்தல் வேண்டும்.



# அமர்வு ஒன்று – காசுத் தொல்லைக்கு (காசு வதை) அறிமுகம் மற்றும் டிஜிட்டல் தீர்வுகள்

**அமர்வு நேர அட்டவணை:** **காலம் - 27 நிமிடங்கள்**

| | அமர்வின் தலைப்பு | காலம் (நிமிடம்) | பக்க இல. |
|---|---|---|---|
| A | அறிமுகம் | 7 | 32 |
| B | டிஜிட்டல் நிதிக்கான அறிமுகம் | 20 | 34 |



## A. அறிமுகம் (7 நிமிடங்கள்)

| பயிற்சி வழங்கலுக்கான படிப்படியான வழிகாட்டல் | தொடர்பான மூலப்பொருட்கள் மற்றும் அறிவுறுத்தல்கள் |
|---|---|
| ➤ பங்கேற்பாளர்களை வரவேற்பதுடன் பயிற்சி ஆரம்பமாகிறது. பயிற்சியளிப்பவர் அவரைப் பற்றி/ அவளைப் பற்றிச் சுருக்கமாக அறிமுகப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். | |
| ➤ இது ஒரு பாதுகாப்பான சூழல் என்பது பற்றியும் விடை பிழையானதாக இருக்குமிடத்து பங்கேற்பாளர்களுக்கு இன்றைய அமர்வில் அவர்களினால் விளங்கிக் கொள்ள முடியாத எந்தவொரு விடயம் பற்றியும் தெளிவுபடுத்திக் கொள்ளும் விதத்தில் எவ்வித தயக்கமுமின்றி எதனையும் கேட்கலாம் என்பது பற்றியும் எடுத்துரைக்கவும். | **தொடர்பு** PPT: DF CS 1-1 |
| ➤ காசினை அடிப்படையாகக் கொண்ட கொடுக்கல்வாங்கல்களின் ஷகாசுத் தொல்லைகளை' எடுத்துக்காட்டுகின்ற "காசு வதைகளிலிருந்து" காசு தொல்லைகளுக்கான பிரச்சாரக் (டிஜிட்டல் நிதியினை ஊக்குவிப்பதற்கான தேசிய பிரச்சாரம்) காணொளியினை ஓடவிடுதல், எவ்விதமான விளக்கமுமின்றி காணொளியினை மிக எளிமையாக ஓடவிடுதல் வேண்டும். | **தொடர்பு** PPT: DF CS 1-2 |
| ➤ பங்கேற்பாளர்கள் அவர்களது நாளாந்த வாழ்க்கையில் காசினைக் கையாளும் பொழுது இத்தகைய தொல்லைகளுக்குள்ளான ஏதேனும் அனுபவத்தினை அவர்கள் கொண்டிருந்தார்களா என்பது பற்றி கலந்துரையாடி அவ்வனுபவம் பற்றி கேட்டு இது தொடர்பில் அவர்களின் பிரதிபலிப்புக்களுக்காக அமைதியாக இருக்கவும் (ஏறத்தாழ 10 விநாடிகள்). பயிற்சியளிப்பவர் பங்கேற்பாளர்களிடையே கலந்துரையாடல்களை ஊக்குவித்தல் வேண்டும். இக்கலந்துரையாடல்களுக்கான மாதிரி அறிமுகப்படுத்தல்கள் பின்வருமாறு இருக்கலாம்: | |
| ➤ "ஊரடங்கு காலப்பகுதியில் வங்கிகள் மூடப்பட்டிருந்தமை பற்றி மீண்டும் சிந்தித்தல். காசினை எடுப்பனவு செய்வதற்கான எந்த வழியுமிருக்கவில்லை. அதன் காரணமாக அநேக மக்கள் இடர்ப்பாடுகளை எதிர்நோக்கியதுடன் அவர்களது வீட்டுவாசல்களுக்கு வந்த பொருட்களைக் கூட அவர்களால் வாங்க முடியாமல் போயிற்று.<br>தன்னியக்கக் கூற்றுப்பொறி அட்டைகளை (ATM Card) வைத்திருந்தவர்களினால் காசினை எடுப்பனவு செய்ய முடிந்தது. எனினும் காசினைக் கையாளுகின்ற பொழுது கொவிட்-19 தொற்றக்கூடும் என்ற கரிசனைகள் காணப்பட்டன. காசினைத் தொடுவதற்கு நாம் எல்லோரும் சிறிய தயக்கத்தினைக் கொண்டிருந்தோம் அல்லவா?<br>இந்த நேரத்தில், பௌதீக ரீதியாகக் காசினைக் கையாளாமல் அதனை அணுகுவதற்கு வேறு ஏதேனும் வழிவகைகள் இருந்திருக்குமானால் அது மிகச் சிறந்த வழியாக இருக்குமென உங்கள் மனதில் ஓர் எண்ணம் உதித்திருக்குமல்லவா.<br>அநேக கைத்தொழில்களில் காணப்பட்ட புத்தாக்கங்கள் கொவிட்-19 காலத்தின் போது மக்களைப் பாதுகாப்பாக வைத்திருக்கும் தன்மையினை விரைவுபடுத்தின. காசினைக் கையாளும் பிரச்சனைக்கு எம்மிடமொரு தீர்வு இருந்திருக்குமானால், அது மிகப் பயனுள்ளதாக இருந்திருக்கும்."<br>"வங்கிகளும் நிதியியல் நிறுவனங்களும் உண்மையில் கொவிட்-19 பரவுவதற்கு மிக முன்னமேயே காசிற்கு மாற்று வழிகளை உருவாக்கியிருந்தன. பிரச்சனை என்னவெனில் நாம் அது பற்றி அறியாதிருந்தமையோகும். மிக வசதியான மாற்று வழிகள் இருந்த நேரத்தில் காசினைக் கையாள்வதற்காகப் பெருமளவு நேரத்தினையும் சக்தியையும் வீணடித்திருக்கிறோம்.<br>இம்மாற்று வழிகள் பற்றி இன்று நாம் பயின்று கொள்வோம்." | |



| பயிற்சி வழங்கலுக்கான படிப்படியான வழிகாட்டல் | தொடர்பான மூலப்பொருட்கள் மற்றும் அறிவுறுத்தல்கள் |
|---|---|
| தொடர்பான சிலைட்டில் - slide உள்ளவாறு பயிற்சித் தலைப்பினைக் காட்சிப்படுத்தி அத்தலைப்பு பற்றி பயிலுநர்கள் சிந்திப்பதற்கு ஒரு சில விநாடிகளை வழங்கவும். | **தொடர்பு PPT: DF CS 1-3** |
| இப்பயிற்சியின் நோக்கம் கிடைக்கத்தக்கதாகவிருக்கும் டிஜிட்டல் நிதியியல் சேவைகள் தொடர்பான அறிவினைப் பெற்றுக்கொள்வதே என்பதனைப் பங்கேற்பாளர்களுக்கு விளக்குவதுடன் அவற்றை எவ்வாறு பாதுகாப்பாகப் பயன்படுத்துவது என்பது பற்றியும் விளக்கிக் கூறுதல் வேண்டும். | **தொடர்பு PPT:DF CS 1-4 & 1-5** |
| பயிற்சி முழுவதிலும் காட்சிப்படுத்தப்பட்டிருக்க வேண்டிய அடிப்படைத் தன்மையினைக் கொண்ட சுவரொட்டி வரை நடந்து செல்லுதல் வேண்டும். அதன் பின்னர் வினைத்திறன்மிக்க பயிற்சியை உறுதிப்படுத்துவதற்காக அடிப்படை விதிகள் பற்றி பங்கேற்பாளர்களுக்கு சுருக்கமாக விளக்குதல் வேண்டும். | **பயிற்சியை 1** |
| இக்கட்டத்தில், பயிற்சியளிப்பவர் பங்கேற்பாளர்களின் பின்னணி பற்றி கண்டறிந்து கொள்ளுதல் வேண்டும். இதன் மூலம் பயிற்சியளித்தலை அவர்களுக்கேற்ற விதத்தில் மாற்றியமைத்தக் கொள்ள முடியும். இதன் மூலம் குறிப்பிட்ட சில விடயங்களை விளக்குவதற்கு அவர்களுக்குப் புரியும் விதத்தில் உதாரணங்களைப் பயன்படுத்த முடியும். பயிற்சியளிப்பவர் பின்வரும் இரண்டு வினாக்களைக் கேட்பதற்கும் அதற்கான பதிலிறுப்புக்களைச் சுருக்கமாகப் பெற்றுக் கொள்வதற்கும் ஊக்குவிக்கப்படுகின்றார்.<br>**I. உங்களிடையே யார் தொழில்முயற்சியாளர்களாக இருக்கிறீர்கள்?**<br>**II.உங்களிடையே யார் இதற்கு முன்னர் டிஜிட்டல் நிதியியல் கொடுக்கல்வாங்கல்களை/ கொடுப்பனவுகளை மேற்கொண்டிருக்கின்றீர்கள்?** | |

## B. டிஜிட்டல் நிதிக்கான அறிமுகம் (20 நிமிடங்கள்)

| பயிற்சி வழங்கலுக்கான படிப்படியான வழிகாட்டல் | தொடர்பான மூலப்பொருட்கள் மற்றும் அறிவுறுத்தல்கள் |
|---|---|
| தலைப்பின் முக்கியத்துவத்தினை வலியுறுத்தும் விதத்தில் "காசு வதை" பிரச்சாரத்திலிருந்து குறுகிய காணொளியொன்றினைக் காட்டுதல். இது வாடிக்கையாளர்களினால் காசினை பயன்படுத்துவதில்/ கையாள்வதிலுள்ள தொல்லைகள் பற்றி விளக்குகிறது | **தொடர்பு** PPT: DF CS 1-6 |
| காணொளி காட்சி முடிவடைந்ததும் காணொளி பற்றி மிகச் சுருக்கமாக கலந்துரையாடுவதற்காக இரண்டு பங்கேற்பாளர்களை எழுமாறாகத் தெரிவுசெய்யவும். அவர்கள் பார்த்த காட்சி பற்றியும் இது போன்ற அனுபவம் அவர்களுக்கும் ஏற்பட்டதுண்டா என்பது பற்றியும் கலந்துரையாடவும். ஆழமான கலந்துரையாடல்களுக்கும் போக வேண்டாம். | |
| அடுத்த சிலைட்டிலுள்ள காணொளியினை ஓடவிடவும். இது காசினைப் பயன்படுத்துவதனால் வர்த்தகர்கள் எதிர்நோக்கும் தொல்லைகளை எடுத்துக்காட்டுவதுடன் காணொளியின் இறுதியில் அதேபோன்ற கலந்துரையாடலில் ஈடுபடல் வேண்டும். பங்கேற்பாளர்களிடையேயுள்ள தொழில்முயற்சியாளர்களிடம் அவர்களது அனுபவத்தினைப் பகிர்ந்து கொள்ளுமாறு (ஏதுமிருப்பின்) கேட்பதற்கு பயிற்சியளிப்பவர் ஊக்குவிக்கப்படுகின்றார். | **தொடர்பு** PPT:DF CS 1-7 |
| பயிற்சியளிப்பவர், பயிற்சிபெறுபவர்களின் கவனத்தினை அடுத்த சிலைட்டிற்கு ஈர்ப்பதன் மூலம் இந்நடவடிக்கையினை முடிவிற்குக் கொண்டு வருதல் வேண்டும். இது கலந்துரையாடப்பட்ட விடயத்தினைச் சுருக்கமான ஆராய்கிறது. | **தொடர்பு** PPT:DF CS 1-8 |
| காசு கொடுப்பனவுகளுக்கான மாற்று ஏற்பாடொன்றாகக் கொடுப்பனவுகளைச் செய்வதற்கு எளிமையான, பாதுகாப்பானதும் உடனடியானதுமான வழிகளுக்கான தேவையினை ஆராய்தல். | **தொடர்பு** PPT:DF CS 1-9 and 1-10 |
| இப்பொழுது கலந்துரையாடப்பட்ட அனைத்து விடயங்கள் பற்றியும் அவற்றிற்கான சாத்தியமான தீர்வுகள் பற்றியும் சபையோருக்கு அறிவித்தல் வேண்டும். சிலைட்டின்படி, பரந்தளவிற்கு இரண்டு வகைகளாக பிரித்தல் உ-ம்: இணையவழி கொடுப்பனவுகள் மற்றும் அட்டைக் கொடுப்பனவுகள். | **தொடர்பு** PPT:DF CS 1-11 |
| டிஜிட்டல் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்வதற்குப் பயன்படுத்தப்படும் வேறுபட்ட சாதனங்கள் பற்றிச் சுருக்கமாகக் குறிப்பிடுகின்ற சிலைட்டுக்களைப் பயன்படுத்தவும். அமர்வுச் செயன்முறையின் போது இவை விபரமாக ஆராயப்படவுள்ளமை பற்றி பங்கேற்பாளர்களுக்கு அறிவித்தல் வேண்டும். | **தொடர்பு** PPT:DF CS 1-12 and 1-13 |
| சிலைட்டிலுள்ளவாறு, இலங்கை மத்திய வங்கியினாலும் நிதியியல் துறையினாலும் டிஜிட்டல் நிதிக்கு வழங்கப்பட்ட தூண்டுதல் பற்றி சுருக்கமாகக் குறிப்பிடல் வேண்டும். | **தொடர்பு** PPT:DF CS 1-14 |
| வேறுபட்ட கொடுப்பனவு முறைகள் பற்றி இன்னமும் மூன்று நிமிடங்களில் ஆரம்பமாகவுள்ள அடுத்த அமர்வில் விபரமாக கலந்துரையாடப்படவுள்ளமையினைத் தெரிவிப்பதன் மூலம் அமர்வினை முடித்து பங்கேற்பாளர்களுக்குச் சிறிய இடைவேளையொன்றினை வழங்குதல் வேண்டும். | |

# அமர்வு இரண்டு - இணையவழிக் கொடுப்பனவுகள்: இணையத்தள வங்கித்தொழில் மற்றும் செல்லிடத் தொலைபேசி வங்கித்தொழில் செயலி

**அமர்வு நேர அட்டவணை:** **காலம் - 40 நிமிடங்கள்**

| | அமர்வின் தலைப்பு | காலம் (நிமிடம்) | பக்க இல. |
|---|---|---|---|
| A | இணையவழிக் கொடுப்பனவுகள் | 5 | 36 |
| B | இணையத்தள வங்கித்தொழில் | 10 | 36 |
| C | செல்லிடத் தொலைபேசி வங்கித்தொழில் செயலி | 25 | 37 |

## A. இணையவழிக் கொடுப்பனவுகள் (5 நிமிடங்கள்)

| பயிற்சி வழங்கலுக்கான படிப்படியான வழிகாட்டல் | தொடர்பான மூலப்பொருட்கள் மற்றும் அறிவுறுத்தல்கள் |
|---|---|
| கொடுப்பனவுகளுக்காக, சுற்றோட்டத்திலுள்ள நாணயம்/ காசுத் தாள்கள் மற்றும் குற்றிகளைப் பயன்படுத்துவது வாடிக்கையாளர் மற்றும் வியாபாரிகளுக்கு இடர்ப்பாடுகளை தோற்றுவிப்பதனைப் பங்கேற்பாளர்கள் நினைவில் கொள்ளுதல் வேண்டும். | |
| காசினை அடிப்படையாகக் கொண்ட கொடுக்கல்வாங்கல்களுக்கு மாற்று ஏற்பாடாக நிதியியல் நிறுவனங்களினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இணையவழிக் கொடுப்பனவுகள் தீர்வாக அமையும் என்பதனைக் குறிப்பிடுவதன் மூலம் அமர்வினை ஆரம்பிக்கலாம். சிலைட்டிலுள்ளவாறு 3 முறைகள் பற்றி சுருக்கமாகக் குறிப்பிடலாம். | **தொடர்பு PPT: DF CS 2-1** |

## B. இணையத்தள வங்கித்தொழில் (15 நிமிடங்கள்)

| பயிற்சி வழங்கலுக்கான படிப்படியான வழிகாட்டல் | தொடர்பான மூலப்பொருட்கள் மற்றும் அறிவுறுத்தல்கள் |
|---|---|
| வங்கிக்கோ அல்லது நிதியியல் நிறுவனத்திற்கோ விஜயம் செய்யாமல் பெரும்பாலான வங்கித்தொழில் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு உதவுகின்றதொரு சேவையாக இணையத்தள வங்கித்தொழில் காணப்படுவது பற்றி குறிப்பிடல் வேண்டும். பெயர் குறிப்பிடுகின்றவாறு இணையத்தளத்தினை எந்தவொரு கருவியின் மூலமும் அதாவது திறன்பேசி, லப்டொப், கணனி முகத்திரை மற்றும் டப்லெட் என்பன மூலம் அணுகலாம். பங்கேற்பாளர்கள் இவற்றுடன் பரீட்சயமுடையவர்களாக இருப்பார்களாகையால் இச்சிலைட் தொடர்பில் 30 விநாடிகளுக்குக் கூடுதலாக செலவிடத் தேவையில்லை | **தொடர்பு PPT: DF CS 2-2** |
| வாடிக்கையாளர்களும் வர்த்தகர்களும் அவர்களது நிதியியல் நிறுவனத்தின் பாதுகாப்பான வெப்தளத்தினூடாக அவர்களது கணக்குகளை அணுகவும் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்ளவும் முடியும். சிலைட்டினைப் பயன்படுத்தி இணையத்தள வங்கித்தொழிலூடாக பங்கேற்பாளர்கள் மேற்கொள்ளக்கூடிய பல்வேறுபட்ட வகைக் கொடுக்கல்வாங்கல்களை விளக்கவும். முன்னர் குறிப்பிடப்பட்டிருக்கும் காசினைப் பயன்படுத்துகின்ற தொல்லையுடன் கலந்துரையாடலை இணைத்து வரிசையில் காத்திருத்தல் அல்லது பாதுகாப்புக்கள் பற்றி கலந்துரையாடவும் | **தொடர்பு PPT: DF CS 2-3** |
| சிலைட் எடுத்துக்காட்டுகின்ற இணையத்தள வங்கித்தொழில் வழங்குகின்ற நிதியியல் நிறுவனங்களின் பெயர்களைக் குறிப்பிடுவதுடன் இந்நிறுவனங்களில் எவற்றிலேனும் பங்கேற்பாளர்கள் கணக்கொன்றினை வைத்திருப்பின் அவர்கள் இணையத்தள வங்கித்தொழில் வசதியைப் பயன்படுத்த முடியும் என்பதனை அவர்களுக்கு நினைவூட்டவும். இப்பட்டியல் கிரமமான முறையில் மாற்றமடையும் என்பதனையும் அவர்களுக்கு நினைவூட்டவும் | **தொடர்பு PPT: DF CS 2-4** |

## C. செல்லிடத் தொலைபேசி வங்கித்தொழில் செயலி (20 நிமிடங்கள)

| பயிற்சி வழங்கலுக்கான படிப்படியான வழிகாட்டல் | தொடர்பான மூலப்பொருட்கள் மற்றும் அறிவுறுத்தல்கள் |
|---|---|
| இணையவழிக் கொடுப்பனவின் அடுத்த வகை பற்றி விரைவாக விபரிக்கவும். செல்லிடத் தொலைபேசி வங்கித்தொழில் செயலி பற்றி நாங்கள் பார்ப்போம். தேவைப்படுமிடத்து, பயிற்சியளிப்பவர் சிலைட் DF CS 2-6 இனைப் பங்கேற்பாளர்களுக்கு மீண்டும் விரைவாகக் காட்டலாம். செல்லிடத் தொலைபேசி செயலிகளூடாக வாடிக்கையாளர்களும் வர்த்தகர்களும் பின்வருவனவற்றை மேற்கொள்ள முடியும் என்பதனை எடுத்துக்காட்டலாம்:<br>• அவர்களது சேமிப்பு அல்லது நடைமுறைக் கணக்கினை முகாமைப்படுத்தலாம்<br>• பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான கொடுப்பனவுகளைச் செய்யலாம் | **தொடர்பு PPT: DF CS 2-5** |
| எந்த ஒருவரும் தமது திறன் தொலைபேசிகளுக்கு செல்லிடத் தொலைபேசி வங்கித்தொழில் செயலியை பதிவிறக்கம் செய்து கொள்வதன் மூலம் இச்சேவைகளை அணுகமுடியும் என்பதனை விளக்குதல். செயலி நிதியியல் நிறுவனமொன்றிலுள்ள கணக்கொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். இவ்வசதியை தற்போது வழங்குகின்ற நிதியியல் நிறுவனங்கள் தொடர்பான சிலைட்டினூடாக எடுத்துக்காட்டவும். | **தொடர்பு PPT: DF CS 2-6** |
| சிலைட்டின்படி, செல்லிடத் தொலைபேசி வங்கித்தொழில் பிரயோகங்களினூடாகப் பெற்றுக்கொள்ளக்கூடிய பல்வேறு சேவைகளையும் விளக்கவும். | **தொடர்பு PPT: DF CS 2-7** |
| தொடர்பான சிலைட்டிலுள்ள காணொளியின் பால் சபையோரின் கவனத்தினை ஈர்க்கவும். காணொளியின் இறுதியில், பங்கேற்பாளர்களுடன் சிறிய கலந்துரையாடலொன்றினை நடத்தவும். இத்தகைய சூழ்நிலையில் அவர்களது அனுபவம் பற்றிக் கேட்கவும். இணையவழி வங்கித்தொழில் வசதிகள் பற்றி கதைக்கவும். இணையவழி வங்கித்தொழிலா அல்லது செல்லிடத் தொலைபேசி செயலிகளா காசினினைப் பயன்படுத்தும் தொல்லையினைக் குறைக்க உதவும் என்பது பற்றி கலந்துரையாடவும். | **தொடர்பு PPT: DF CS 2-8** |
| இணையவழி வங்கித்தொழில் சேவைகளைப் பற்றிக் குறிப்பிட்டதன் இறுதியாக, எமது வாழ்வினை இலகுபடுத்துவதற்கு அவற்றைப் பயன்படுத்த முயற்சிக்குமாறு பங்கேற்பாளர்களை ஊக்குவித்தல் வேண்டும். எவ்வாறெனினும் நாம் அவற்றை மிகப் பொறுப்புடன் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பது பற்றி குறிப்பிடல் வேண்டும் என்பதுடன் இவ்வம்சங்கள் பயிற்சியில் உள்ளடக்கப்படுதலும் வேண்டும். | |
| சபையோரின் பிரதிபலிப்புக்களைப் பொறுத்து, அடுத்த அமர்வினை தொடர்வதற்கு முன்னதாக மூன்று நிமிட இடைவேளையொன்றினை விடுவது பொருத்தமானதாக இருக்கும். | |

# அமர்வு மூன்று - இணையவழிக் கொடுப்பனவுகள்: ஜஸ்ட்பே மற்றும் லங்காகியூஆர் போன்ற செல்லிடத் தொலைபேசிப் பிரயோகங்கள்

**அமர்வு நேர அட்டவணை:** **காலம் - 40 நிமிடங்கள்**

| | அமர்வின் தலைப்பு | காலம் (நிமிடம்) | பக்க இல. |
|---|---|---|---|
| A | அறிமுகம் | 5 | 39 |
| B | ஜஸ்ட்பே | 15 | 40 |
| C | லங்காகியூஆர் | 20 | 41 |

## A. அறிமுகம் (5 நிமிடங்கள்)

| பயிற்சி வழங்கலுக்கான படிப்படியான வழிகாட்டல் | தொடர்பான மூலப்பொருட்கள் மற்றும் அறிவுறுத்தல்கள் |
|---|---|
| பயிற்சியளிப்பவர், இப்பயிற்சி முழுவதினதும் குறிக்கோள் பங்கேற்பாளர்களுக்கு கிடைக்கத்தக்கதாகவுள்ள டிஜிட்டல் கொடுப்பனவுகளின் பல்வேறுபட்ட முறைகளையும் அவர்களுக்கு அறிமுகப்படுத்துவதே என்பதனை நினைவூட்டிக் கொண்டு இவ்வமர்வினைத் தொடங்குதல் வேண்டும். | |
| தொடர்பான சிலைட்டின்படி, காசினைக் கையாளும் தொல்லையினை வெற்றி கொள்வதற்கு, குறிப்பாக பொருட்கள் மற்றும் சேவைகளுக்காகக் கொடுப்பனவுகளைச் செய்யும் போது பயன்படுத்தக்கூடிய இணையவழிக் கொடுப்பனவுகளின் மேலும் இரண்டு வழிமுறைகள் காணப்படுகின்றன.<br>சிறிய பெறுமதியினைக் கொண்ட கொடுக்கல்வாங்கல்களுக்காக அத்தகைய சேவைகளின் முக்கியத்துவத்தினை விளக்குதல். எடுத்துக்காட்டாக, டிஜிட்டல் நிதியியல் சேவைகள் அனைத்தையும் உள்ளடக்கியிருப்பதுடன் பாரிய பெறுமதிக் கொடுக்கல்வாங்கல்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டிருக்கவில்லை. இவ் டிஜிட்டல் நிதிச் சேவைகளினூடாக மீன் வியாபாரிகள் மற்றும் இளநீர் விற்பனையாளர்களும் கூட கொடுப்பனவுகளை மிக வசதியாகச் செய்யலாம். கையில் சரியான தொகைக்குப் பணமில்லாவிட்டாலும் கூட வாடிக்கையாளர் தற்பொழுது சரியான தொகைக்கு கொடுப்பனவுகளைச் செய்யமுடிவதனால் கடைக்காரரினால் போதுமான சில்லறைகள் இல்லாமையால் அடிக்கடி எதிர்நோக்கப்படும் பிரச்சனைகள் கட்டுப்படுத்தப்படுகின்றன.<br>நாம் இங்கு ஆராயவுள்ள இரண்டு முறைகளான JustPay மற்றும் கியூஆர் குறியீடு பற்றிக் குறிப்பிடவும். | **தொடர்பு** PPT: DF CS 3-1 |



## B. JustPay (15 நிமிடங்கள்)

| பயிற்சி வழங்கலுக்கான படிப்படியான வழிகாட்டல் | தொடர்பான மூலப்பொருட்கள் மற்றும் அறிவுறுத்தல்கள் |
|---|---|
| JustPay என்பது தகவல்களைப் பரிமாற்றவும் பயன்படுத்திக் கொள்ளக்கூடியதுமான தன்மையினை உருவாக்குவதற்கு உலகின் செல்லிடத் தொலைபேசி பிரயோகங்களுக்குப் பின்னால் தொழிற்படுகின்ற உட்கட்டமைப்பாகும். இவ்வசதியின் மூலம் நீங்கள் உங்கள் தன்னியக்கக் கூற்றுப் பொறி அட்டைகளை விரும்பிய வேறுபட்ட வங்கிகளின் தன்னியக்கக் கூற்றுப் பொறிகளில் பயன்படுத்திக் கொள்ளமுடியும். எந்தவொரு வங்கியுடனும் இணைப்பினைக் கொண்டுள்ள எந்தவொருச் சேவைகளுக்கும் கொடுப்பனவுகளை மேற்கொள்ள உங்கள் செல்லிடத் தொலைபேசி வங்கித்தொழில் செயலிகளைப் பயன்படுத்திக் கொள்ளமுடியும். JustPay யினால் இயலுமைப்படுத்தப்பட்ட தற்போதைய வரையறை கொடுக்கல்வாங்கலொன்றிற்கு ரூ.50,000 ஆகும் (மேலே பூர்வாங்க அறிவுறுத்தல்களில் அறிவிக்கப்பட்டவாறு பயிற்சியளிப்பவர் பிந்திய விதிகள் பற்றி லங்காகிளியர் வெப்தளத்துடன் சரிபார்த்துக் கொள்ளுதல் வேண்டும்). பதிவிறக்கம் செய்வதற்கும் அச்சேவைகளைப் பயன்படுத்திக் கொள்வதற்குமாக வழங்கப்பட்ட தொடர்பான செல்லிடத் தொலைபேசி வங்கித்தொழில் செயலிகள் பற்றி பங்கேற்பாளர்கள் அவர்களது வங்கிகளுடன் சரிபார்த்துக் கொள்ளுமாறு அறிவித்தல் வேண்டும். | **தொடர்பு** PPT: DF CS 3-2 |
| இப்பொழுது, தொடர்பான சிலைட்டிலுள்ள காணொளி மீது சபையோரின் கவனத்தினை ஈர்த்தல் வேண்டும். | **தொடர்பு** PPT: DF CS 3-3 |
| வணிகர்கள் இவ்வசதியை அனுபவிப்பது தொடர்பில் விளக்குதல், அவர்கள் தமது வங்கிகளுடன் எளிய முறையில் இணைக்கப்படுவது அவசியமென்பதுடன் இச்சேவைகளுக்காகப் பதிவுசெய்தல் வேண்டும். பதிவுசெய்யப்பட்டதும் அவர்களது வங்கி, வணிகர் அடையாளத்தினை (இலக்கத்தினை) வழங்கும். இதனை அவர்கள் வாடிக்கையாளர்களுக்கு காட்சிப்படுத்தல் வேண்டும். | |
| பணத்தினைப் பெற்றுக்கொள்வதனை இயலுமைப்படுத்துகின்ற விதத்தில் வியாபாரத்தினை மேற்கொள்கின்ற ஆளொருவர் எந்தவொரு பிரயோகங்களையும் பயன்படுத்தத் தேவையில்லை. குறுந்தகவல் வசதிக்காக மாத்திரம் பதிவுசெய்து கொண்டால் போதுமானது. இதன் மூலம் கொடுப்பனவுகள் இடம்பெறும் போது அவர்கள் கவனித்துக் கொள்ள முடியும். | |

## C. Lanka QR (20 நிமிடங்கள்)

| பயிற்சி வழங்கலுக்கான படிப்படியான வழிகாட்டல் | தொடர்பான மூலப்பொருட்கள் மற்றும் அறிவுறுத்தல்கள் |
|---|---|
| இப்பகுதியைத் தொடங்கும் பொழுது சிலைட்டின் மீது உருவம் ஒன்று பொறிக்கப்பட்டுள்ளமையினைப் பார்த்திருக்கிறீர்களா எனப் பங்கேற்பாளர்களைக் கேட்பதுடன் ஆரம்பித்தல் வேண்டும். அதற்கான பதிலிறுப்புக்களைப் பொறுத்து, இது எதற்காகப் பயன்படுத்தப்படுகின்றது என்பதனை நீங்கள் அறிவீர்களா என மேலும் கேட்டல் வேண்டும். அதனைத் தொடர்ந்து QR குறியீடு தகவல்களைச் சேமிப்பதற்கும் பகிர்ந்து கொள்வதற்கும் தற்பொழுது பொதுவாகப் பயன்படுத்தப்பட்டு வருவது பற்றி விளக்குதல் வேண்டும். தகவல்களைப் பகிர்ந்து கொள்வதற்கு இது வினைத்திறன்மிக்க முறையாக இருப்பதனால் அண்மைக் காலத்தில் இவை பிரபல்யம் பெற்று வருகின்றன. உணவுத் தயாரிப்புக்கள் மீதான மேலதிக ஊட்டச்சத்து அல்லது இலத்திரனியல் பொருட்கள் போன்றவற்றிற்கான அறிவுறுத்தல் கைநூல் போன்றவற்றை உள்ளடக்கிய உதாரணங்களைக் குறிப்பிடலாம். | **தொடர்பு** PPT: DF CS 3-4 |
| QR குறியீடுகளும் கொடுப்பனவுகளைச் செய்வதற்கான முறையொன்றாக இருப்பது பற்றி விளக்குதல் வேண்டும். அத்துடன் இது அண்மையில் LankaQR என இலங்கை மத்திய வங்கியினால் சந்தைக்கு அறிமுகப்படுத்தப்பட்டது. குறிப்பாக, சிறிய பெறுமதியினைக் கொண்ட கொடுக்கல்வாங்கல்களுக்கு, பாண் துண்டொன்றிற்கான கொடுப்பனவுகளைக் கூட QR குறியீட்டினூடாகச் செலுத்துவது பயன்மிக்கது என்பதனை வலியுறுத்துதல் வேண்டும். | |
| இது தொடர்பில் காணொளியில் காட்டப்படும் செய்முறையினைப் பார்க்குமாறு சபையோரைக் கேட்டுக் கொள்ளுதல் வேண்டும். | **தொடர்பு** PPT: DF CS 3-5 |
| காணொளியின் இறுதியில், கொடுப்பனவுகளைச் செய்வதற்கும் பெறுவதற்கும் QR குறியீடுகளைப் பயன்படுத்துவது சுலபமானதும் வசதியானதுமான வழி என்பதனைக் குறிப்பிடல் வேண்டும். ஏனெனில் இது ஸ்கான் பண்ணுவதனை மட்டுமே தேவைப்படுத்துகிறது - இலக்கங்கள் போன்றவற்றை டைப்பண்ணுவது போன்றன எதுவும் தேவையில்லை. | |
| பொருட்களையும் சேவைகளையும் கொள்வனவு செய்யும் பொழுதும் பட்டியல்களைச் செலுத்தும் போதும் கொடுப்பனவுகளைச் செய்யமுடியும் என்பது பற்றி பங்கேற்பாளர்களுக்கு அறிவித்தல் வேண்டும். வாடிக்கையாளரொவர் செல்லிடத் தொலைபேசி வங்கித்தொழில் செயலியை வைத்திருப்பது அவசியமாகும். இது QR குறியீட்டினூடான கொடுப்பனவுகளை அனுமதிக்கின்ற வேளையில் வணிகரொருவர் அவரின் வியாபாரத்திற்காக QR குறியீட்டினைக் கொண்டிருப்பது அவசியமாகும். பயிற்சிபெறுநர்கள் அவர்களது வியாபாரத்திற்கு QR குறியீட்டினைப் பெற்றுக்கொள்ள வேண்டுமாயின், அவர்கள் தனித்துவமான QR குறியீட்டிற்காக அவர்களது வங்கிகளைத் தொடர்பு கொள்ளுதல் வேண்டும். | **தொடர்பு** PPT: DF CS 3-6 |

| பயிற்சி வழங்கலுக்கான படிப்படியான வழிகாட்டல் | தொடர்பான மூலப்பொருட்கள் மற்றும் அறிவுறுத்தல்கள் |
| --- | --- |
| வாடிக்கையாளர்கள் QR குறியீட்டினூடாகக் கொடுப்பனவுகளைச் செய்யும் போது கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்வது பற்றிய இற்றைப்படுத்தலைப் பெறுவதற்காக வணிகர்கள் குறுந்தகவல் சேவையினைச் செயற்படுத்திக் கொள்ளுதல் வேண்டும் என்பதனையும் குறிப்பிடல் வேண்டும். ஆகவே, திறன் தொலைபேசி இல்லாமலேயே வணிகர்கள் QR குறியீட்டு வசதியை அனுபவிக்கலாம். | |
| இச்சேவைகள் சிலைட்டுக்களில் காட்டப்பட்டவாறான நிறுவனங்களிலிருந்து கிடைக்கும் என்பதனை பங்கேற்பாளர்களுக்கு அறியத்தரவும். அவை வங்கிகள், நிதியியல் நிறுவனங்கள், செல்லிடத் தொலைபேசி வலட்டுக்களை வழங்குவோர் மற்றும் பின்டெக் சேவை வழங்குவோர் என பல்வேறு தரப்பினராக விரிந்து காணப்படுகிறது. | **தொடர்பு** PPT: DF CS 3-7 to 3-10 |
| LankaQR இன் தற்போதைய இயலுமைப்படுத்தப்பட்ட வரையறை கொடுக்கல்வாங்கலொன்றிற்கு ரூ.50,000 ஆகும். | |
| இச்சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு சபையோர் முயற்சிப்பதற்கு ஊக்குவிப்பளித்தல் வேண்டும். மூன்று நிமிட நேர ஓய்வினை வழங்கி அடுத்த இரண்டு அமர்வுகளுக்காகவும் சரியான நேரத்திற்கு மீண்டும் வருகை தருமாறு பங்கேற்பாளர்களைக் கேட்டுக் கொள்ளுதல் வேண்டும். | |

# அமர்வு நான்கு - கொடுக்கல்வாங்கல்களுக்கு அட்டைகளைப் பயன்படுத்தல்

**அமர்வு நேர அட்டவணை:** **காலம் - 40 நிமிடங்கள்**

| | அமர்வின் தலைப்பு | காலம் (நிமிடம்) | பக்க இல. |
|---|---|---|---|
| A | அறிமுகம் | 5 | 44 |
| B | கொடுப்பனவு அட்டைகளைப் பயன்படுத்தல் | 35 | 46 |

## A. அறிமுகம் (5 நிமிடங்கள்)

| பயிற்சி வழங்கலுக்கான படிப்படியான வழிகாட்டல் | தொடர்பான மூலப்பொருட்கள் மற்றும் அறிவுறுத்தல்கள் |
|---|---|
| தொடர்பான சிலைட்டினைக் காட்சிப்படுத்தல். அட்டைக் கொடுப்பனவுகள் காசில்லாத கொடுப்பனவுகள் முறை என்பதனை அறிமுகப்படுத்தல் வேண்டும். இவ்வமர்வானது அட்டையினைப் பயன்படுத்திப் பாதுகாப்பாக எவ்விதம் கொடுக்கல்வாங்கலைச் செய்வது என்ற வகையிலான விடயங்களை உள்ளடக்கியிருக்கும். | **தொடர்பு PPT: DF CS 4-1** |
| பங்கேற்பாளர்களிடையே அட்டையினைப் பயன்படுத்துபவர்கள் யார் இருக்கிறீர்கள் எனக் கேட்கவும். ஒன்று அல்லது இரண்டு பதிலிறுப்பாளர்களைத் தெரிவுசெய்து அவர்கள் எதற்காக அட்டைகளைப் பயன்படுத்துகின்றார்கள் என்பது பற்றிக் கதைத்தல் வேண்டும். | |
| அவர்கள் தமது கணக்கிலிருந்து பணத்தினை எடுப்பனவு செய்வதற்கு மாத்திரம் அட்டைகளைப் பயன்படுத்துவதாகக் குறிப்பிடுவார்களாயின், அவர்கள் தமது அட்டைகளை மேலும் அநேக கொடுக்கல்வாங்கல்களுக்குப் பயன்படுத்த முடியும் என்பது பற்றி அவர்களுக்குத் தெரியப்படுத்தல் வேண்டுமென்பதுடன் இவ்வமர்வில் அவர்களுக்கு அது பற்றி விளக்குதலும் வேண்டும். எவரேனும் பொருட்களுக்கான கொடுப்பனவிற்கும் அவற்றைப் பயன்படுத்துவதாகக் குறிப்பிடுமிடத்து அதற்கான விடையினை ஏற்றுக்கொண்டு மற்றைய பயன்பாடுகள் பற்றியும் ஆராய்தல் வேண்டும். | |
| அட்டைகள் செல்வந்தர்களினால் மட்டுமே பயன்படுத்தப்படுகிறது என நாம் வழமையாக நம்பிக் கொண்டிருந்த போதும் தற்பொழுது பெரும்பாலும் எவரும் இதனைப் பயன்படுத்திக் கொள்ளமுடியும் என்பதனைக் குறிப்பிடல் வேண்டும். | |





| பயிற்சி வழங்கலுக்கான படிப்படியான வழிகாட்டல் | தொடர்பான மூலப்பொருட்கள் மற்றும் அறிவுறுத்தல்கள் |
|---|---|
| இன்றைய அமர்வு பங்கேற்பாளர்களுக்கு அட்டைகள் பற்றிய அறிவினை வழங்கும் விதத்தில் ஊக்குவிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் அவற்றை அவர்கள் எவ்வாறு பயன்படுத்த முடியும் என்பது பற்றியும் குறிப்பிடுதல் வேண்டும். | |
| தொடர்பான சிலைட்டில் குறிப்பிடப்பட்டவாறு, தற்போது சந்தையில் பயன்படுத்தப்படும் மூன்று வகையான அட்டைகள் பற்றிச் சுருக்கமாக விளக்குதல் வேண்டும். | **தொடர்பு PPT: DF CS 4-2** |
| பெறுமதி சேமிக்கப்பட்ட அட்டை பற்றி அறிமுகப்படுத்தி அதன் தொழிற்பாடு பற்று அட்டையைப் போன்றதே என்பதனைக் குறிப்பிடவும். எனினும், பற்று அட்டை போலன்றி பெறுமதி சேமிக்கப்பட்ட அட்டை, முன்னரே நிர்ணயிக்கப்பட்ட பெறுமதிக்கு ஏற்பவே நிரப்பப்பட வேண்டியிருக்கும். | |
| அட்டையின் பெறுமதி முன்கூட்டியே நிரப்பப்பட்டிருப்பதனால் கணக்குடமையாளர் கொடுக்கல்வாங்கல் வரையறை தொடர்பில் கட்டுப்பாடொன்றினைக் கொண்டிருப்பார். ஆகவே, பெற்றோரின் கட்டுப்பாட்டின் கீழ் பிள்ளைகளின் செலவுகளுக்கும் இணையவழிக் கொடுக்கல்வாங்கல்களுக்கும் அட்டை பயன்மிக்கதாக இருக்கும். வெளிநாட்டிற்குப் பயணம் செய்யும் போதும் இவ்வட்டை பயன்மிக்கதாக இருக்கும். எனினும், அத்தகைய விடயத்தில் தொடர்ச்சியாக அட்டையினை நிரப்பிக் கொள்ளும் வசதி கிடைக்கத்தக்கதாக இராது. | |
| சிலைட்டில் காட்டப்பட்டவாறு, அடுத்துக் கவனிக்க வேண்டிய விடயம், பற்று மற்றும் கடன் அட்டைகளுக்கிடையிலான வேறுபாடுகள் பற்றியதாக இருப்பதுடன் அவற்றைச் சபையோருக்கு விளக்குதல் வேண்டும். பற்று அட்டைகள் ஆளொருவரின் சொந்தக் கணக்கொன்றிலிருந்து பணத்தினைச் செலவிடுவதற்கு பயன்படுத்தப்படுகின்றது என்பது பற்றியும் கொடுகடன் அட்டைகள் என்பது குறிப்பிட்டதொரு காலப்பகுதிக்குள் மீண்டும் செலுத்தப்பட வேண்டிய கடன் வசதிகள் என்ற உண்மையினையும் எடுத்துக் காட்டுகின்றது. | **தொடர்பு PPT: DF CS 4-3** |

## B. கொடுப்பனவு அட்டைகளைப் பயன்படுத்தல் (35 நிமிடங்கள்)

| பயிற்சி வழங்கலுக்கான படிப்படியான வழிகாட்டல் | தொடர்பான மூலப்பொருட்கள் மற்றும் அறிவுறுத்தல்கள் |
|---|---|
| இரண்டு முக்கிய வகையான கொடுப்பனவு அட்டைகளை அடையாளம் காண்பதற்கான முக்கியத்துவத்தினைக் குறிப்பிடவும். | **தொடர்பு PPT: DF CS 4-4** |
| குறுகிய குழுச் செயற்பாட்டு நடவடிக்கையினை அறிமுகப்படுத்தல்:<br>ஒவ்வொரு குழுவிற்கும் மாதிரி அட்டையினை வழங்கல். அட்டையினை விநியோகிக்கும் போது கீழேயுள்ள வினாக்களின் பட்டியலிலிருந்தான வினா அட்டையுடன் சேர்த்து, குழுவின் அரைப்பகுதியினர் மாதிரி பற்று அட்டையினையும் மற்றைய அரைப்பகுதியினர் கடன் மாதிரி அட்டையினையும் வைத்திருப்பதனை உறுதிப்படுத்தல் வேண்டும். குழுக்களிலும் பார்க்கக் வினாக்கள் கூடுதலாக இருக்குமிடத்து ஒவ்வொரு குழுவிற்கும் ஒன்றிற்கும் கூடுதலான வினாக்களை வழங்கலாம்.<br>1. நீங்கள் கடன் அட்டையினையா அல்லது பற்று அட்டையினையா வைத்திருக்கின்றீர்கள்? எவ்வாறு நீங்கள் அதனை அடையாளம் காண்கிறீர்கள்?<br>2. அட்டையின் இலக்கம் என்ன மற்றும் எத்தனை இலக்கங்கள் அதிலுள்ளன?<br>3. அட்டையின் சொந்தக்காரர் பற்றி ஏதேனும் தகவல் உள்ளதா?<br>4. உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அட்டையின் வகை என்ன? (விசா, மாஸ்டர், அமெக்ஸ்)<br>5. அட்டையின் மீது காலாவதியாகும் திகதி ஏதேனும் உண்டா? அது எவ்வாறு காட்டப்படும்?<br>6. CVC இலக்கம் எங்கே குறிப்பிடப்படுகிறது? அது எத்தனை இலக்கங்களைக் கொண்டிருக்கிறது?<br>7. அட்டையில் கையொப்பமிடுவதற்கு ஏதேனுமிடமுண்டா?<br>8. வழங்குகின்ற நிதியியல் நிறுவனத்தினைத் தொடர்பு கொள்வதற்கான தகவல்கள் எதனையும் அட்டை கொண்டுள்ளதா? அவ்வாறாயின் அது என்ன? | |
| விடையளிப்பதற்கு குழுவினருக்கு இரண்டு நிமிடங்கள் வழங்கவும் | |
| ஒவ்வொரு குழுவினரையும் (வினா கொடுக்கப்பட்டதன் ஒழுங்கில்) அவர்கள் தொடர்பான வினாவிற்கு விடையளிக்குமாறு கேட்டுக் கொள்ளவும் பின்னர் அவர்களது விடையினை விளக்கவும் | |
| பயிற்சியளிப்பவர் பவர்பொயின்டிலுள்ள விடை சிலைட்டினூடாக அழுத்தும் வேளையில் இக்கலந்துரையாடல் இடம்பெறுவதுடன் தொடர்பான தகவல்களை சிலைட்டில் காணலாம். | **தொடர்பு PPT: DF CS 4-5 to 4-15** |

| பயிற்சி வழங்கலுக்கான படிப்படியான வழிகாட்டல் | தொடர்பான மூலப்பொருட்கள் மற்றும் அறிவுறுத்தல்கள் |
|---|---|
| ➢ ஒவ்வொரு குழுவினரதும் முறைகள் முடிவடைந்ததும் சிலைட்டில் காட்டப்பட்டவாறு அட்டை ஷிப், NFC மற்றும் காந்த நாடா போன்ற மேலதிக பண்புகளை விளக்கவும். அதேபோன்று இரகசிய அடையாள இலக்கத்தினையும் (PIN) அதன் முக்கியத்துவத்தையும் விளக்கவும். | **தொடர்பு PPT: DF CS 4-16** |
| ➢ அடுத்து நாம் கடன் அட்டை மீது ஒரு சில நிமிடங்கள் கவனத்தினைச் செலுத்துவோம் எனக் குறிப்பிடவும். மீண்டும் பயிற்சிபெறுபவர்களுக்கு, கடன் அட்டைகள் கடன்களை உருவாக்குமென்பதனால் அது பற்றியும் கூடுதலான தகவல்களை அறிந்து கொள்வதன் முக்கியத்துவத்தினையும் அறிவிக்கவும். | **தொடர்பு PPT: DF CS 4-17** |
| ➢ வேறுபட்ட நிறுவனங்கள் கடன் அட்டைகளை வழங்கலாம். இலங்கையில் கடன் அட்டைகளை வழங்குகின்ற நிறுவனங்கள் சிலைட்டில் காட்டப்பட்டுள்ளன. | **தொடர்பு PPT: DF CS 4-18** |
| ➢ பயிற்சியளிப்பவர் இலங்கையில் கடன் அட்டையொன்றிற்கு தகைமை பெறுவதற்கான அடிப்படைத் தேவைப்பாடுகள் பற்றி (சிலைட்டின்படி) விளக்குதல் வேண்டும். | **தொடர்பு PPT: DF CS 4-19** |
| ➢ அத்துடன் சிலைட்டிலுள்ள விபரங்களின்படி பிரதான கடன் அட்டை உரிமையாளர் அவரது கடன் அட்டை வரையறைக்குள் மற்றையவர்களின் சார்பில் துணை அட்டைகளையும் பெற்றுக்கொள்ள முடியும் என்பதனையும் விளக்கவும். | **தொடர்பு PPT: DF CS 4-20** |
| ➢ இக்குறைந்தபட்ச தகைமையினைக் கொண்ட ஆளொருவர் அவரது நாணய நம்பகத்தன்மையினை கடன் அட்டையை வழங்கும் நிதியியல் நிறுவனத்திற்கு நிரூபித்தல் வேண்டுமென்பதனை வலியுறுத்தவும். தனிப்பட்ட ஒருவரின் நாணய நம்பகத்தன்மை கடன் அட்டையின் வரையறையினைத் தீர்மானிக்கும் என்பதுடன் இது, வழங்கும் நிதியியல் நிறுவனத்தினால் உறுதிப்படுத்தப்பட்டிருக்கும். தனிப்பட்டவரின் நம்பகத்தன்மையின் வரலாறும் மொத்த ஆண்டு வருமான மட்டமும் பரிசீலனையில் கொள்ளப்படும் முக்கிய காரணிகளாக இருக்கும் என்பதனை இங்கே குறிப்பிடுதல் வேண்டும். | |
| ➢ இனி, கடன் அட்டையினைப் பயன்படுத்துவதிலுள்ள நன்மைகள் பற்றி கதைக்கவும். | **தொடர்பு PPT: DF CS 4-21** |
| ➢ சிலைட்டின் மீது கவனத்தினைத் திருப்பி, மாதமொன்றிற்கு எவ்வளவு பணத்தினைத் தீர்ப்பனவு செய்யலாம் என்பதனைக் குறிப்பிடுமாறு கேட்கவும். வழமையாக வட்டியற்ற உயர்ந்தபட்ச கடன் காலம் குறைந்தபட்ச நிர்ணயமான 21 நாட்களிலிருந்து 51 நாட்களாகும். | |

| பயிற்சி வழங்கலுக்கான படிப்படியான வழிகாட்டல் | தொடர்பான மூலப்பொருட்கள் மற்றும் அறிவுறுத்தல்கள் |
| --- | --- |
| ➢ சிலைட்டிலுள்ள சூத்திரத்தின்படி பிந்தியக் கொடுப்பனவுகளுக்கான வட்டிக் கணிப்புப் பற்றி விளக்கவும். பின்வருவனவற்றை பங்கேற்பாளர்களுக்கு வலியுறுத்திக் கூறவும்:<br>• சாத்தியமானளவிற்கு, வட்டியைத் தவிர்க்கும் விதத்தில் உங்கள் கொடுப்பனவுப் பட்டியலை ஒவ்வொரு மாதமும் முழுமையாகச் செலுத்துங்கள்.<br>• பட்டியலை முழுமையாகச் செலுத்துமுடியவில்லையாயின், குறைந்தபட்சக் கொடுப்பனவுகளையாவது கூடுதலானளவிற்குச் செலுத்தவும்.<br>• உங்களது நாளாந்த நிலுவையினைக் குறைக்கும் விதத்தில் மாதமொரு முறை செலுத்துவதிலும் பார்க்கக் கூடுதலான தடவைகளில் கொடுப்பனவுகளைச் செய்யுங்கள்.<br>• உங்களது முழு நிலுவைகளையும் முழுமையாகச் செலுத்த முடியவில்லையாயின், தாமதக் கட்டணத்தினைத் தவிர்த்துக் கொள்ளும் விதத்தில் உங்களால் முடிந்த வரையிலான கொடுப்பனவுகளைச் செய்வதனைக் கருத்திற் கொள்வதுடன் வட்டிக்குட்படக்கூடிய ஒட்டுமொத்த நிலுவைகளைக் குறைத்துக் கொள்ளவும். | **தொடர்பு PPT: DF CS 4-22 to 4-24** |
| ➢ எடுத்துக்காட்டொன்றாக, காசு முற்பணம் பெறப்பட்டிருக்குமிடத்து இதற்கான மீள்கொடுப்பனவிற்கு முன்னுரிமையளிக்கப்படும். இதற்கான வட்டி எடுப்பனவு செய்யப்பட்ட நாளிலிருந்து கணிக்கப்படும். காசு முற்பணங்கள் மீதான வட்டி, எடுப்பனவு செய்யப்பட்ட திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் என்பதனை பயன்பெறுபவர்களுக்கு நினைவூட்டுதல் வேண்டும். வட்டியற்ற காலம் எதுவுமில்லை. | |
| ➢ பிரபல்யம்மிக்க கடன் அட்டைப் பயன்பாட்டு பொறிமுறையொன்றாக, தவணை முறையினை அடிப்படையாகக் கொண்ட கொடுப்பனவுத் திட்டங்களை அறிமுகப்படுத்துவது. இது வட்டியற்ற தவணைத் திட்டத்திலிருந்து (கையாளல் கட்டணம் கூட இல்லாமல்) அல்லது வட்டிக் கூறுடன் கூடிய தவணைத் திட்டம் வரையிலான வீச்சில் வேறுபடுகிறது. | |
| ➢ அட்டையினை அடிப்படையாகக் கொண்ட கொடுக்கல்வாங்கல்களைப் பயன்படுத்த முடியுமிடத்து உதாரணங்களுடன் சம்பவங்களைச் சுருக்கமாக விளக்குதல்.<br>உதாரணம்:<br>நீங்கள் அல்லது உங்கள் குடும்ப உறுப்பினரொருவர் தனியார் வைத்தியசாலைக்கு விஜயம் செய்கின்றவிடத்து காணப்படும் உயர் மனஅழுத்தம் மிக்க சூழலைக் கற்பனை செய்யுங்கள், இத்தகைய சூழ்நிலைகளின் போது அவசரமாகக் கவனிக்க வேண்டிய மருத்துவ விடயங்களினால் மனத் தடுமாற்றங்களுக்குட்பட்டு மற்றைய எந்தவொரு விடயங்களின் மீது கவனம் செலுத்த முடியாமல் போகலாம். காசினைக் கொண்டு வரக்கூட நீங்கள் மறந்து போகலாம் அல்லது அவசரத்தில் தன்னியக்கக் கூற்றுப் பொறிகளை (ATM) அணுக முடியாதிருந்திருக்கலாம். அத்தகைய சந்தர்ப்பத்தில் கொடுப்பனவுகளைச் செய்ய குறிப்பாக, உங்கள் கடன் அட்டைகளைப் பயன்படுத்தலாம். இது ஒரு வகையான கடன் என்பதனால் தங்களின் இயல்புக்கேற்றவாறு மீள்கொடுப்பனவுகளைச் செய்தல் வேண்டும் - இது ஒரு அவசர காலக் கடன் போன்றது அத்துடன் மிக வசதியானது. | **தொடர்பு PPT: DF CS 4-25** |
| ➢ அட்டைகளைப் பயன்படுத்தும் வாடிக்கையாளர்களிடமிருந்து கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்வதனை இது இலகுபடுத்துவதனால் வியாபாரத்திற்கும் இது சுலபமானது என்பதனைக் குறிப்பிடவும். | |
| ➢ வர்த்தகச் சொந்தக்காரர்கள் அட்டைக் கொடுப்பனவுகளைப் பெறத் தேவையான விற்பனை மையப் பொறியினை (POS) எவ்வாறு பெற்றுக்கொள்வது என்பது பற்றி அவர்களது வங்கிகளுடன் கலந்துரையாடுதல் வேண்டும். | |
| ➢ நியம அளவிலான விற்பனை மையப் பொறியினைப் பெற்றுக்கொள்வது இடர்ப்பாடானதாக இருப்பின், செல்லிடத் தொலைபேசியுடன் இணைக்கத்தக்க விற்பனை மையக் கருவி போன்ற கிடைக்கத்தக்க புதிய மாற்று முறைகள் பற்றி உங்கள் வங்கிகளுடன் ஆராயலாம். உண்மையில் QR குறியீடு போன்ற மாற்று ஏற்பாடுகளும் தற்பொழுது சாத்தியமானதே. | |

# அமர்வு ஐந்து - பாதுகாப்பாக இருங்கள்

**அமர்வு நேர அட்டவணை:** **காலம் - 40 நிமிடங்கள்**

| | அமர்வின் தலைப்பு | காலம் (நிமிடம்) | பக்க இல. |
|---|---|---|---|
| A | அட்டையினைப் பயன்படுத்தும் போது எவ்வாறு பாதுகாப்பாக இருப்பது | 25 | 50 |
| B | இணையவழிக் கொடுப்பனவுகளைச் செய்யும் போது எவ்வாறு பாதுகாப்பாக இருப்பது | 15 | 52 |

## A. அட்டையினைப் பயன்படுத்தும் போது எவ்வாறு பாதுகாப்பாக இருப்பது (25 நிமிடங்கள்)

| பயிற்சி வழங்கலுக்கான படிப்படியான வழிகாட்டல் | தொடர்பான மூலப்பொருட்கள் மற்றும் அறிவுறுத்தல்கள் |
|---|---|
| அட்டைகளைப் பயன்படுத்தும் போது எவ்வாறு பாதுகாப்பாக இருப்பது? | |
| குறிப்பாகப் பணத்தினைக் கையாளும் பொழுது, பாதுகாப்பாகவும் எச்சரிக்கையுடனும் எப்பொழுதும் இருப்பது முக்கியமானது என்பது பற்றி ஆராய்தல். | |
| காசினைப் பயன்படுத்தும் போது நாம் எவ்வாறு கவனமாக இருப்போமோ அதேபோன்று டிஜிட்டல் முறையில் கொடுக்கல்வாங்கலைச் செய்யும் போதும் கவனமாக இருத்தல் வேண்டும். கொடுப்பனவு அட்டைகளைப் பயன்படுத்தும் போதும் அதனைத் தொடர்ந்து இணையவழிக் கொடுக்கல்வாங்கல்களைச் செய்யும் போதும் நல்ல நடைமுறைகளை முதலில் பழகிக் கொள்ள வேண்டும் என்பது பற்றியும் பங்கேற்பாளர்களுக்குச் சொல்லிக் கொடுத்தல் வேண்டும். | |
| காசைப் பயன்படுத்தும் போது நாம் எவ்வளவு கவனமாக இருப்போமோ அதேபோன்று டிஜிட்டல் முறையில் கொடுக்கல்வாங்கல்களைப் பயன்படுத்தும் போதும் கவனமாக இருத்தல் வேண்டும். பங்கேற்பாளர்கள் கொடுப்பனவு அட்டைகளைப் பயன்படுத்தும் போது சில நல்ல பழக்கவழக்கங்களை முதலில் பயின்று கொள்ளுதல் வேண்டும் என்பது பற்றியும் இணையவழியில் கொடுக்கல்வாங்கலை மேற்கொள்ளும் போது பின்பற்ற வேண்டிய விடயங்களையும் தெரியப்படுத்தல் வேண்டும். | |
| கவனம் தேவைப்படும் இரண்டு விடயங்கள் காணப்படுகின்றன: பின்பற்ற வேண்டிய படிமுறைகள் மற்றும் செய்ய வேண்டிய விடயங்கள் | **தொடர்பு PPT: DF CS 5-1 to 5-3** |
| குறுகிய கால செய்முறைகளை அறிமுகப்படுத்தல்<br>• எழுமாறாகத் தெரிவுசெய்யப்பட்ட மூன்று குழுக்களிடையே மூன்று விடய சூழல் ஆய்வினை விநியோகித்து அவர்கள் விடைகளை ஆயத்தப்படுத்துவதற்கு மூன்று நிமிடங்களைப் பங்கேற்பாளர்களுக்கு வழங்கவும்.<br>• அவர்கள் ஆயத்தமாகியதும் விடய ஆய்வு ஒன்றிற்குரிய குழுவினரை அழைத்து அவர்களது விடையினைச் சமர்ப்பிக்குமாறு கேட்கின்ற அதேவேளையில் தொடர்பான சிலைட்டினைத் திரையில் காட்சிப்படுத்தவும். இதனையடுத்து மற்றைய இரண்டு விடய ஆய்வுகளையும் தொடரவும். அனைத்துக் குழுவினரும் விடய ஆய்வுகளைச் சமர்ப்பிக்கும் வரை சூழல் தொடர்பில் எவ்வித விளக்கத்தினையும் வழங்க வேண்டாம். | |

| பயிற்சி வழங்கலுக்கான படிப்படியான வழிகாட்டல் | தொடர்பான மூலப்பொருட்கள் மற்றும் அறிவுறுத்தல்கள் |
|---|---|
| ➤ சிலைட்டுக்களின்படி, ஒருவர் அட்டைகளைப் பாதுகாப்பாகவும் புத்திசாலித்தனமாகவும் பயன்படுத்துவதற்கு எடுக்க வேண்டிய அடிப்படைப் படிமுறைகளை விளக்குதல் வேண்டும். வேறு எவரேனும் ஆளிடம் உங்கள் அட்டையினைக் கையளிப்பது உங்கள் இரும்புப் பெட்டகத்தின் சாவியை அவரிடம் கையளிப்பதற்குச் சமமானது என்பதனை வலியுறுத்துதல் வேண்டும். பெருந்தொகைக்கான கடன் வரையறையினைக் கொண்ட கடன் அட்டையினை வைத்திருப்பவர்கள் பணத்தினை எவ்வாறு மீண்டும் செலுத்தப் போகிறோம் என்ற தெளிவான திட்டமெதனையும் கொண்டிருந்தாலொழிய, அட்டையினைப் பயன்படுத்திச் செலவுகளை மேற்கொள்ளக்கூடாது. தாமதமான கொடுப்பனவுக் கட்டணம் பற்றி கவனம் செலுத்தவும். வெளிநிற்கும் நிலுவைகளுக்கெதிராக உயர்ந்தளவு வட்டி வீதங்கள் விதிக்கப்படுகின்றன. | **தொடர்பு** **PPT: DF CS 5-4 to 5-5** |
| ➤ பணம் மற்றும் கடன் தொடர்பான சிறந்த முகாமைத்துவத்தினை உறுதிப்படுத்துவதற்காக மேலதிகப் பாதுகாப்பு துப்புக்கள் மற்றும் தந்திரோபயங்களூடாக பங்கேற்பாளர்களுக்கு வழிகாட்டவும். | |
| ➤ ஒரே தடவையிலான கடவுச்சொல்லின் முக்கியத்துவத்தினை எடுத்துக்கூறவும். இது, இணையவழிக் கொடுக்கல்வாங்கலொன்றினை நிறைவு செய்ய பாதுகாப்பான வழியொன்றாகும். இது, உங்களின் இணையவழிக் கொடுக்கல்வாங்கல்களுக்கான இன்னொரு அடுக்குப் பாதுகாப்பாகும். ஒரே தடவையிலான கடவுச்சொல் சுமுகமாகத் தொழிற்படுவதனை உறுதிப்படுத்துவதற்கு பயிற்சி பெறுபவர்கள் அவர்களைத் தொடர்பு கொள்வதற்கான அண்மைய விபரங்களை வழங்குவதனை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். | |



## B. இணையவழிக் கொடுப்பனவுகளைச் செய்யும் போது எவ்வாறு பாதுகாப்பாக இருப்பது (15 நிமிடங்கள்)

| பயிற்சி வழங்கலுக்கான படிப்படியான வழிகாட்டல் | தொடர்பான மூலப்பொருட்கள் மற்றும் அறிவுறுத்தல்கள் |
|---|---|
| இணையவழியில் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்ளும் போது எவ்வாறு பாதுகாப்பாக இருப்பது என்பது பற்றி சிறந்த முறையில் தெரிந்து கொள்வதற்கான செயன்முறையில் தற்பொழுது ஈடுபடப்போகிறோம் என்பது பற்றி பயிற்சிபெறுபவர்களுக்கு அறிவுறுத்தல் வேண்டும். | |
| சிலைட்டிலுள்ள வினாக்களைக் கேட்கவும். ஒவ்வொரு வினாவிற்கும் 'ஆம்' என்ற பதிலையுடையவர்கள் தமது கையை உயர்த்துமாறு கேட்டுக் கொள்ளவும். | **தொடர்பு** PPT: DF CS 5-6 to 5-9 |
| நீங்கள் அனைத்துக் கேள்விகளையும் கேட்டு முடிக்கும் வரை விடைகளை வெளிப்படுத்த வேண்டாம். அதன் பின்னர் ஒவ்வொரு வினா பற்றியும் கலந்துரையாடல் விளக்கங்களை ஆரம்பிக்கவும். | |
| பதிலிறுப்புக்களின் அடிப்படையில், பங்கேற்பாளர்கள் இணையவழி கொடுக்கல்வாங்கல்களைப் பாதுகாப்பதற்கு ஒரு சில பழக்கவழக்கங்களைப் பின்பற்ற வேண்டியிருக்கும். சுலபமாக நினைவில் கொள்வதற்கு அவர்களை ஐந்து ஆம் மற்றும் மூன்று இல்லை என வகைப்படுத்தியுள்ளோம் எனக் குறிப்பிடவும். | **தொடர்பு** PPT: DF CS 5-10 |
| தொடர்பான சிலைட்டுக்களின்படி சிறந்த பழக்கவழக்கங்களையும் தீய பழக்கவழங்கங்களையும் பற்றி விபரமாக ஆராய்தல். | **தொடர்பு** PPT: DF CS 5-11 to 5-12 |
| டிஜிட்டல் நிதி தொடர்பான பயிற்சி இப்பொழுது முடிவிற்கு வந்துள்ளமை பற்றி பங்கேற்பாளர்களுக்கு அறிவிக்கவும். அவர்கள் பயின்றிருக்கும் டிஜிட்டல் நிதியின் பல்வேறு நன்மைகள் பற்றியும் பங்கேற்பாளர்களுக்கு தெரிவிக்கவும். அவர்கள் அவர்களது வங்கியை அல்லது நிதியியல் நிறுவனத்தினைச் சந்தித்து இச்சேவைகளைப் பெறுவது பற்றி அறிந்து கொள்ள அவர்களை ஊக்குவித்த வேண்டும். | |
| பங்கேற்பாளர்களுக்கும் பயிற்சியை ஒருங்கிணைத்த அலுவலர்களுக்கும் இதனை வெற்றிபெறச் செய்வதற்குப் பங்களித்த எல்லோருக்கும் நன்றிகளைத் தெரிவிக்கவும். | **தொடர்பு** PPT: DF CS 5-13 to 5-14 |

## அடிக்குறிப்பு

[1] IFC's GUIDE TO TRAINING Setting the standard for the design, delivery, and evaluation of learning programs in emerging markets, 2020.

[2] https://www.ifc.org/wps/wcm/connect/region__ext_content/ifc_external_corporate_site/south+asia/resources women+matter+findings+from+sri+lankas+national+financial+inclusion+survey

[3] https://blogs.worldbank.org/psd/more-time-idiyappam-building-appetite-digital-financial-inclusion-sri-lanka

[4] International Finance Corporation and the DaNa Facility, (2019), "Respectful Workplaces: Exploring the Costs of Bullying and Sexual Harassment to Businesses in Myanmar" Available at https://www.ifc.org/wps/wcm/connect/region__ext_content/ifc_external_corporate_site/east+asia+and+the+pacific/resources/respectful+workplaces-myanmar

[5] Kelley, Donna, Candida Brush, Patricia Greene, Mike Herrington, Abdul Ali, and Penny Kew, (2015), Special Report: Women's Entrepreneurship 2015. Global Entrepreneurship Monitor (GEM). Available at: http://www.babson.edu/Academics/center/blankcenter/global-research/gem/Documents/GEM%202015%20Womens%20Report.pdf

[6] Training that includes soft skills, including social support and confidence building, is more effective, especially for women with lower self-efficacy and should be a core element of high-quality training programs. Training with peer or group-based

Training can provide social support and boost self-confidence. Mayra Buvinic and Megan O'Donnell, (2019), Center for Global Development Blog: Women's Economic Empowerment: Some Tips for Informed Investments (2019) Available at: https://www.cgdev.org/blog/womens-economic-empowerment-some-tips-informed-investments

IN PARTNERSHIP WITH

Australian Aid

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

Regional Development Department
Central Bank of Sri Lanka
No.30, Janadhipathi Mawatha
Colombo 01
Sri Lanka

IFC International Finance Corporation
WORLD BANK GROUP

*Creating Markets, Creating Opportunities*

IFC, Level 15, NDB-EDB Tower
42, Nawam Mawatha
Colombo 2, Sri Lanka

The authors can be contacted at:
tarandara@ifc.org , sgunasekera@ifc.org